"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவள்ளுவர் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் முழுமுதல், நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், ஓர் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுதல், நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 27 தி.பி. உ0உச — மடங்கல் — (ஆகத்து 93) (ஓலை: 2]

"அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;
அறம்பிழை வாணிகர் ஒருபால்
வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;
வருவதை முடக்குவர் ஒருபால்;
கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்
கயவரும் கனியரும் ஒருபால்;
இரவினும் திண்ணிய மடமைகொள் நாடே
எங்கொளி பெறுகுவ தினியே!"

—1963. —பாவலரேறு பெருஞ்சித்திரனார்

மதவெறி நஞ்சூட்டி, மக்களைப் பிளவுபடுத்தி
நெறி கெட்டோர் செய்யும்
மதக் கருத்துப் பரப்பலையும்,
மாந்த உயிர்களைக் கொன்றிடும் ஊர்வலங்களையும்,
பிற மதவெறி யாட்டங்களையும் இசைந்து வளர்க்கிற அரசு,
மக்களின் ஒற்றுமைக்காக, உரிமைக்காக
விடுதலை உணர்வூட்டும் கருத்துப் பரப்பலை மட்டும்
தடை செய்திடுமாம்!
இதைச் சுட்டியுரைத்திடும் நம் தமிழறிஞரையோ
சிறைக்குள் வாட்டிடுமாம்!
இதற்கெதிராய் முழங்கிடுவோம்...
தமிழரின் கருத்துரிமையை மீட்டிடுவோம்!
வீணரின் மதவெறியை மாய்த்திடுவோம்! ○

சிறைக்குள் இருக்கும் செந்தமிழ் அரிமாவைச் சென்றடைந்த மடல்கள்....

1. நண்பருக்கு,

அன்புடன்... உங்கள் கடிதம் முன்பே கிடைத்தது. உருக்கமும் உறவு நெருக்கமும் பின்னிற்றும் அந்த கடிதம் எங்கள் நெஞ்சையும் உருக்கியது.

நாம் செய்து வந்துள்ள, செய்துகொண்டு இருக்கிற தமிழர் நலப் பணி வீண்போகவில்லை. அண்மைக் காலமாக நமது வழியில் நடக்கத் தொடங்கியுள்ளவர்களின் தொகை வெகுவாகக் கூடியுள்ளது. இங்குள்ள குப்பனையும் சுப்பனையும் அதன் மேல் வல்லாண்மை செலுத்தும் பார்ப்பானையும் மறந்துவிட்டு, 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று முழங்கிக் கொண்டு திரிந்த போலிப் பொதுவுடைமையியக்கம் (கொம்யூனிஸ்டுகளும்) அவர்களின் துண்டுதுணுக்குகளான கடிநாய்ப் பொதுவுடைமை-யர்களும் (கொம்யூனிஸ்டுகளும்) நம்முடைய வழிக்கு வரவேண்டிய நெருக்கடி அவர்களுக்கெல்லாம் ஏற்பட்டுள்ளது. கள்ளச் சந்தைக்காரர்களும் கடத்தல் சந்தைக்காரர்களும் கூடத் தமிழின் மறைவில் பாதுகாப்புக் கேட்க கிளம்பி இருக்கிறார்கள்; பாதுகாப்புக் கிடைக்கக் கூடிய எந்த இடத்திலும் புகுந்து கொள்ளுவதுதானே இந்தப் பெருச்சாளிகளின் வழக்கம்! நமது புரட்சி பாவலர் கூட,

> ''கலங்காத நெஞ்சத்து மறவர் கூட்டக்
> கடலொன்று படையென்று தொடரும் போதும்,
> துலங்கா மூஞ்சிக் கூட்டம் ஒன்று மட்டும்
> துட்டடித்துக் கொண்டிருத்தல் வெட்கக் கேடு''

என்று, இங்குள்ள நடப்பை அப்படியே பாடிச் சாடி வைத்திருக்கிறார் அல்லவா?

இப்படியாக, பலபேர் தமிழுக்கு வந்திருப்பது நாம் எழுப்பி வந்த குரல் வீண் போகவில்லை என்பதையும் தமிழ் இனநலப் போராட்டத்துக்குப் புதியதோர் சாய்கால் ஏற்பட்டுள்ளது என்பதையுமே காட்டுகின்றது. எனவே, நீங்கள் உள்ளேயும் நாங்கள் வெளியேயும் படுகின்ற துயரம், நாம் திட்டமிட்டு நடத்திவரும் தமிழர் எழுச்சிப் பணியை விரைவிலேயே வலு-வடையச் செய்துவிடும் என்பது திண்ணம். வரலாற்றுப் பின்னணி சார்ந்த இந்த நம்பிக்கை: எதிர்காலப் பெரிய வெளிச்சத்தை இப்போதே எங்கள் நெஞ்சில் படரச் செய்கிறது.

நீங்கள் எழுதிவரும் ''திருக்குறள் மெய்ப்பொருள் உரை''—யைக் காணவும் படிக்கவும் ஆர்வலாகக் காத்திருக்கிறோம்.

> ''புதையுண்ட பழமரமும் வயிரம் ஆகும்;—
> பொழிந்து உதிர்ந்த கருமேகம் வெள்ளம் ஆகும்!''

இனிய அன்புடன், பேராசிரியர் சாலை இளந்திரையன்.

2: பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு அய்யா அவர்கட்கு, என் பணிவான வணக்கங்கள் பல. நலமே பொலிக!

உயிருள்ளவரை உங்கள் கொள்கையில் நிலைத்து நிற்பேன் உ.த.மு.க.வையும், 'தமிழ் நிலத்தையும்' தழைக்கச் செய்வதே என் வாழ்வின் குறிக்கோள்.

நீங்கள் நீடூழி வாழ வேண்டுமென உளமார நினைக்கின்றேன். தங்கள் தமிழ்ப்பணிக்கு என் தலைதாழ்ந்த வணக்கங்கள்.

—அன்பன், தி.மு. அரசமாணிக்கம்.

3. பேரன்பின் தமிழ்நலஞ்சான்ற ஐயா, வணக்கம். நலமே. தங்களின் நலஞ் சிறக்கப் பெரிதும் விழைகின்றேன்.

ஐயா, சென்னைச் சிறை எவ்வாறு உள்ளது. தங்களுக்கு இறையருளால் நல்லபடியாக நடக்குமென்று கருதுகிறேன். தமிழக இதழ்களோ் வாய்மென்று முழுங்கி வருகின்றன. இன உணர்ச்சியும் தன்மான உணர்ச்சியும் இளைஞர்களிடம் குறைந்து வருகிறது. திரைப்படக் கவர்ச்சியும் போலி ஆரவாரமும் மக்களை ஆட்டிப் படைக்கின்றது. திருக்குறள் மெய்ப்பொருள் உரை நன்முறையில் நடைபெற்று வருமென்று கருதுகிறேன்.

—அன்புடன், குழந்தை. ஈகவரசன்.

4. பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐயா வணக்கம். நானும், தங்கள் அன்பு மகள் கோகிலா, பேத்தி குறள்மொழி மூவரும் நலம்.

அய்யா உங்களைச் சிறை வைத்து விட்டுக் கண்கள் இருந்தும் குருடர்களானோம், கை, கால்கள் இருந்தும் முடவர்களானோம். ஆனால் வாய் இருந்தும் ஊமைகளானோம் எனும் அவப்பெயர் எடுக்கவில்லை வாய்ப்பு நேரும் போதெல்லாம் தமிழினத்தாரிடம் தங்களின் சிறை வாழ்வு பற்றிப் பேசிக் கொண்டேயிருக்கிறோம்.

7,8-5-93 நாள்களில் ஆழ்வார் திருநகரியிலும், தூத்துக்குடியிலும் நடந்த தமிழர் தேசிய இயக்கப் பொதுக்கூட்டத்திலும் தலைவர் நெடுமாறன் தங்களின் ஈகம் பற்றி பலபட கூறியதோடு குறும்பூர் மலர்வேந்தன் இல்லத் திருமணத்திலும்(வண்டார் குழலி திருமணம்) தங்கள் புகழ் பரப்பியதோடு திருச்செந்தூர் செய்தியாளர் கூட்டத்திலும் தங்களைச் சிறைவைத்திருக்கும் அரசைக் கண்டித்துத் தலைவர் நெடுமாறன் கடுமையாகப் பேசினார். இந் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவன் என்ற முறையில் தங்கள் மேலான கவனத்திற்குமேற்படி செய்தியைக் கொண்டுவருகிறேன். 19-5-93 அன்று நெல்லையில் தங்களின் விடுதலைக்கான மாநாட்டிலும் தலைவர் நெடுமாறனும், அய்யா தமிழ்மாறனும் நானும் கலந்து கொண்டு உரத்த குரல் எழுப்பி உள்ளோம். மக்களிடமும் கருத்துகளைத் திரட்டித் தங்கள் விடுவிப்புக்காக அரசின் கவனத்தை ஈர்க்க முடிவு செய்துள்ளோம்.

அய்யா! தங்களின் ஈகத்தின் முன் தமிழக அரசும், தில்லி அரசும், தலை கவிழ்ந்து நிற்பதை பார்க்கிறேன். பிறபின்,

— அன்புத்தம்பி அ. வியனரசு.

5. அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய செந்தமிழ் அரிமா அய்யா அவர்களுக்கு. நல் வணக்கம், நலமே பொலிக. அம்மா வழி அடிக்கடி உங்களின் நலனை அறிகின்றேன்.

உங்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரை என்று வருமோ எனத் தோழர்கள் குறிப்பாக நமது தென்மொழி இளைஞர்கள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

விரைவில் வெளியில் வந்து நூல் வெளியிடுவீர்கள் என நம்புகிறோம். உடல் நிலை எப்படி அய்யா இருக்கிறது?

—என்றும் உங்களின் நலம் விரும்பும் மாணவன், நற்றேவன்.

6. அய்யா வணக்கம். தாங்கள் திருக்குறளுக்கு உரை எழுதுவதை 'இனி' மூலம் அறிந்தேன். இனி அரசியலில் முதன்மை இடம் வகிக்க போகும்

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்

என்னும் குறளுக்கு இதுவரை உரை தவறாகவே எழுதப்பட்டுள்ளது. மனுதர்மத்தை ஆதரித்து உரை எழுதப்பட்டுள்ளது. எந்தத் தொழில் செய்தாலும் உயர்வு-தாழ்வு இல்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டிதான் இவ்வாறு வள்ளுவர் கூறியிருக்கிறார் பௌத்த—சமண—சமன்மைக் கோட்பாட்டைத் தெளிவாக விளக்க வேண்டுகிறேன்.

—தோழமையுடன், வி. கந்தசாமி.

7. (3-ஆம் வகுப்பு பயிலும் பாவலரேறு ஐயா அவர்களின் பேரன் தெள்ளியனின் மடல்)

அன்புள்ள அம்முப்பா அவர்களுக்குத் தெள்ளியன் எழுதும் மடல். அம்முப்பா நீங்கள் எப்போது வருவீர்கள். உங்களைப் பார்க்க முடியவில்லை. வருத்தமாக உள்ளது. ஒவ்வொரு விடுமுறைக்கும் வருவோம். ஆனால் இப்போது வரமுடியவில்லை. ஏனென்றால் நீங்கள் இல்லாததனால் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. இதனால் அங்கு வரமுடியவில்லை.சாப்பாடு ஒழுங்காக உள்ளதா?

அம்முப்பா விடுதலை ஆனவுடன் இங்குப் புதுவை வீட்டிற்குத் தான் முதலில் வரவேண்டும். நாங்கள் காத்திருப்போம்.

அம்முப்பா உங்கள் உடம்பு நோயில்லாமலும், நலமாகவும் இருக்கவேண்டும் நீங்கள் எப்படியுள்ளீர்கள்?

அம்மும்மா நாள்தோறும் வருகிறார்களா? அம்முப்பா நீங்கள் இல்லாமல் அங்குவர விருப்பம் இல்லை.—இப்படிக்கு, தெள்ளியன்.

8. பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, பணிவுடன் குணத்தொகையன் வணக்கம் தெரிவித்து வரையும் மடல். இங்கு நானும் பொழிலும் மற்றும் இளமுருகு அறிவழகன் ஆகியோரும் நலமே. அங்கு உங்கள் நலனை அறிய ஆவல்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

நெஞ்சிலும், நினைவிலும் நீங்காத தமிழுணர்வால்...

தம் மகளுக்கு

நம் பாவலரேறுவின் பாமடல்!

''மனைவிக்கும் மக்களுக்கும் மாளிகையில் வாழ்வதற்கும் மற்றெதற்கும் பல்லிளிப்புக் காட்டமாட்டேன்''...

—என 1963-இல் செம்மாந்து பாவிசைத்த நம் பாவலரேறு ஐயா அவர்களின் இம்மியளவும் குன்றாத தமிழ்மொழி, இன நாட்டுணர்வின் வெளிப்பாடு—இன்றுவரையும் தமிழ்க் குடும்பங்களுக்கு எவ்வாறு உணர்வூட்டுகிறது என்பதற்காக 'இப் பாடல் இங்கு வெளியிடப்பெறுகிறது. மடங்கல் 2 (18-8-93)-அன்று ஐயா அவர்கள் இப் பாடலைத் தம் மகளுக்கு எழுதியனுப்பியுள்ளார்.

1) அருமை மகள் தேன்மொழிக்கும்,
அன்பிளைய தம்பிக்கும்,
அறிவுச் செல்வர்
பெருமை மிகும் அறிவனுக்கும்,
பெருங்கடமைத் தெள்ளிக்கும்,
பெரியம் மைக்கும்,
ஒருமையுளம் கொண்டு, நலம்
உரைத்து, இதனை வரைகின்றேன்;
உவகை கொள்வீர்!
திருமைஒளிர் நெஞ்சத்தின்
திரள்நலமும் வாழ்த்துகளும்
திகழ்க நன்றே!

2) தேனம்மா! நீ நலமும்
தேறியது கண்டுமகிழ்ந்
தேன், என் உள்ளம்!
ஏனம்மா, மனச்சோர்வும்?
இதன்பொருட்டும் உடல்நலிவும்!
இளைத்துப் போகும்
வானமும், மா நிலமும் உள்ள
வரைநிற்கும் குறள்உரையை
வரைத்து கொண்டு,
நான்இம் மாச் சிறையில்முழு
நலமாக இருக்கின்றேன்;
நலிதல் இல்லேன்!

3) ஆதலினால் நீஎதற்கும்
அஞ்சாமல் துணிந்துநின்றுன்
அப்பாவைப்போல்

தீதெனினும் சோர்வின்றித்
திளைப்பெனினும் செருக்கின்றித்
தேர்ந்த தொண்டின்
மீதுயர்ந்த கொள்கையுடன்
மேந்தமிழ்க்கும் இனத்திற்கும்
தமிழ்நாட் டிற்கும்
காதலுற்ற நின்கணவர்
கடமைசெய்தல் போல்அவர்க்குக்
கைகோப் பாயே!

4) எனைப்போற்ற வில்லை இந்த
இனமும்இந் நாட்டரசும்
என்றே நித்தம்
முனைப்புற்ற ஏக்கத்தால்—
முட்டிவரும் கண்ணீரால்—
முதிர்ந்த அன்பால்—
நினைப்புற்று நினைப்புற்று,
நீயும்நின் அக்கை அண்ணன்,
இனவோ ரோடும்,
சினைப்புற்று நுமையுயிர்த்துச்
சிறந்தஅன்னை துயர்வதெல்லாம்
சிந்தை நேர்வேன்!

5) எனைப்பற்றி நினைப்பதில்லை,
இளமைமுதல் இன்றுவரை
இனிய தேனே!
தனைப்பற்றி நினைத்திருப்பின்
தழைத்த மரம் நிழல், கனிகள்
தருமோ, அம்மா?
நினைப்பற்றுஇம் மொழிநினைத்தேன்;
நிலம்நினைத்தேன்; இனம்நினைத்தேன்;
நீங்கள் எல்லாம்
எனைப் பற்றி வரநினைத்தேன்!
எவ்விடத்தும் எந்நாளும்
இழந்தேன், என்னை!

6) அதனால்தான் நூல்படித்தேன்
ஆழ்ந்தவரலாறறிந்தேன்;
அவை சிந்தித்தேன்!
எதனால்நம் தமிழெல்லாம்
இனமெல்லாம் நாடெல்லாம்
இழந்தோம் — என்றே
முதல்நாளும் இடைநாளும்
கடைநாளும் சிந்தித்து—
முதுமை கண்டேன்!

இதனுல்தான் அம்மா, நாம்
இருக்கஇடம் இல்லாமல்
இடர்கள் உற்ளேம்!

7) பணியேற்றுச் செய்த பணம்
படித்தெழுதி வந்தபணம்
பலநூல் வாங்கத்
துணிவேற்றுச் செலவழித்தேன்!
துயர்நீக்கக் கடன்பெற்றேன்!
தொல்லைப் பட்டேன்!
அணியேற்றம் இல்லை, உன்
அன்னைக்கும் உங்கட்கும்!
அன்றைக் கன்றைத்
தணிவுஏற்றுப் பெற்றதொகை
தனைக்கொண்டு வாழ்ந்தோம், உன்
தாயும் நானும்!

8) மணம் சேர்த்து வைத்தஉங்கள்
மகிழ்ச்சியிலே பெற்றெடுத்த
மக்கட் கெல்லாம்
பணம்சேர்த்து வைக்காமல்,
பயன்கல்வி தனைச்சேர்த்தோம்;
பண்பு சேர்த்தோம்!
குணம்சேர்த்தோம்; நீங்க ளெல்லாம்
கூனுமல் வாழ்வதற்குக்
கொள்கை சேர்த்தோம்;
கணம் சேர்த்த பார்வைகண்டு
காதல் மணம் ஒப்பி, உங்கள்
கைகள் சேர்த்தோம்!

9) தமிழுக்கும் தமிழர்க்கும்
தமிழ்நாட்டு விடுதலைக்கும்
தளராது உள்ளம்
அமிழ்க்காமல் அசையாமல்
ஆர்ப்பரிப்புக் கொள்ளாமல்
ஆய்ந்த கொள்கை
உமிழ்க்காமல் அரசியலில்
உரசாமல் அங்கும்இங்கும்
ஊசா டாமல்,
சிமிழ்க்கின்ற பார்வையிலே
சீரழிக்கும் பகைநடுங்கச்
செயல்கொண் டேனே!

10) மகளே! உன் மனத்தூய்மை
மதித்திறம், வாய்மை, ஒழுங்கு
மாண்பு—என் றெல்லாம்
துகளறும் என் மனத்தெழுந்த
துளிர்ப்பன்றோ? தழைப்பன்றோ?
தொய்வில்லாத
வெகுள் அரிமா வீறெல்லாம்
விளைவெல்லாம் இறையருள் தோய்
வேள்வியன்றோ?
உகளறுமெய்ப் பண்பறிவாய்
உலவும் உங்கள் உணர்வு உயிர்க்குள்
உள்ளேன் அம்மா!

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 12-5-93 அன்று தங்களை வழக்குமன்றத்தில் சந்தித்த மன நெகிழ்ச்சியான நிகழ்ச்சிகளின் எண்ண அசைவுகளிலிருந்த அன்று மாலை நாங்கள் தளைப்படுத்தப்பெற்று 14-5-93 சிறையி-லிடப்பட்டோம்.

'இனி' இதழில் தங்களின் கடிதம் படித்து மனம் நெகிழ்ச்சி-யுற்றோம். 'ஓய்ந்திடல் இல்லை...' 'நெஞ்சுவதில்லை பிறர்பால்...' 'எத்தனை முறைச் சிறையிலிட்டாலும்...' 'எனைச் சிறை செய்யினும்...' என்ற தங்களின் பலப்பல உணர்ச்சி மிகு, எழுச்சி மிகு அறிவுமிகு பாடல்கள் தங்களைப் பற்றி எண்ணும்பொழு-தெல்லாம், கேள்வியுறும்பொழுதெல்லாம் நினைவலைகளில் எழுந்து உணர்ச்சியுற்று உரப்பெற்று உள்ளம் நெகிழ்ச்சியடைந்த நிலையடைகிறோம்.

ஐயா, சிறையில் தங்களின் உடலை வருத்திக்கொண்டு தாங்கள் தமிழுக்குச் செய்துவருகின்ற—ஒரு புரட்சி மிகுந்த பணியான திருக்குறள் மெய்ப்பொருளுரை எழுதும் பணி குறித்து அறிந்-தேன். ஒரு பக்கம் மகிழ்ச்சியாயிருந்தாலும் உடல் நலம் குறித்துக் கவலை. நாங்கள் உடனிருந்து உங்களுக்கு ஒரு சிறு அளவாவது உதவ முடியவில்லையே என்று வருத்தம். உங்களுக்கு உரை எழுத ஓய்வாக சிறையிருப்பினும், இன்றைக்குத் தமிழில் ஒரே அறிஞர்—மிகப்பெரும் அறிஞர் மொழி, இனம், நாட்டிற்கு உழைக்கும்—பாடுபடும்—தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ள போராளி சிறையிலிருக்கிறாரே என்று கவலை.

பணிவுடன்,
கி. குணத்தொகையன்

ஓர் அறிவிப்பு

சலுகை விலையில் 50 இதழ்கள் கொண்ட
தென்மொழி (சு:10 முதல் சு:22 முடிய) ரூ. 30—00
தமிழ்ச்சிட்டு (கு:6 முதல் இ:19 முடிய) ரூ. 20—00
(அஞ்சல் செலவு உட்பட) உடனே வாங்கிப் பயனடையுங்கள்.

இக்கால் உள்ள தமிழ் உண்மைத் தமிழ் அன்று

தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்றவர்களைப் பற்றி, அம் மொழியைச் சிறப்பாகக் கல்லாதவர்களிடம் ஒரு தவறான கருத்து உண்டு. ''அவர்களுக்குத் தமிழ் தவிர வேறு ஒன்றுந் தெரியாது; தமிழிலோ ஒன்றுமே இல்லை; அறிவியல் இல்லை; பொருளியல் இல்லை; உயர்ந்த நாகரிக வாழ்க்கைக்கான புதுமைக் கூறுகள் இல்லை. எனவே வெறும் தமிழ் மட்டுமே கற்றவர்கள் பழமை விரும்பிகள்; கிணற்றுத் தவளைகள். அவர்கள் கருத்துக்கு அத்துணை மதிப்பளிக்கக் கூடாது'' என்பது அவர்கள் கருத்து. இக் கருத்தை ஒருவாறு சரி என்று ஒப்புக்கொள்ளும் வகையில், தமிழ் மொழியை நன்கு கற்ற தமிழாசிரியர்கள் சிலர், தமிழ்மொழியை மட்டுமே படித்தவர்களாகவும், கம்பராமாயணம், வில்லி பாரதம், திருவிளையாடல் புராணம், சீவக சிந்தாமணி, நளவெண்பா ஓரளவு சிலப்பதிகாரம், திருக்குறள்—முதலிய இலக்கிய நூல்களை மட்டுமே அறிவு நூல்கள், கற்க வேண்டிய நூல்கள், அவையே உலகம் என்று கருதுபவர்களாகவும் இருந்து வருகிறார்கள். இந்த இரு சாராரின் தவறான கருத்துதல்களை ஓரளவு போக்கி, இரு தரப்பிலும் சில உண்மை நிலைகளை உணர்த்துதலே இவ்வுரையின் தலையாய நோக்கம். தமிழ்மொழி பற்றிய தாழ்ச்சி, உயர்ச்சி நிலைகளை ஒருவாறு சமநிலைப் படுத்துவதற்கும் அம்மொழி மேம்பாடு குறித்த உண்மையான அறிவியல் நோக்கைத் தெரிந்து தெளிவதற்கும் இக்கட்டுரை பயன்படும் என்று எண்ணுகின்றோம்.

முதலில், தமிழ் கற்றவர்களுக்குச் சில கருத்துகளை வெளிப் படையாகச் சொல்லிக் கொள்ளுதல் நலம் பயக்கும் என்று கருதுகின்றோம். தமிழ்மொழி ஒன்று மட்டுமே உலகம் ஆகாது, என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இனி, வெறும் தமிழுக்காக மட்டுமே தமிழைப் படிக்கக் கூடாது. தமிழை மட்டுமன்று, வேறு எந்த மொழியையும், அதற்காக மட்டுமே படிக்கக் கூடாது. குறிப்பாகத் தமிழாசிரியர்கள் சிலர் தமிழ்மொழியை, அதிலுள்ள ஒரு சில இலக்கிய இலக்கண நூல்களைப் படித்த மட்டிலேயே, தங்களுக்குப் பிறரைக் காட்டிலும் சிறிது அறிவு கூடுதலாக வந்துவிட்டதாகவும், பிறரைக் காட்டிலும் தாங்கள் மட்டுமே பயனுடைய வாழ்க்கை வாழ்வதாகவும், தமக்குத் தெரிந்த அளவு பிறருக்கு ஏதும் தெரியாது என்பதாகவும் எண்ணிக் கொள்வது போல் தெரிகிறது. இன்னும் இவர் தமிழ் கற்ற படைகையில் ஆங்கிலம் கற்றவர்களையோ அறிவியல் கற்றவர்களையோ ஒன்றுந் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொள் வதுபோல் தெரிகிறது. இஃது, இங்குள்ள சிவனிய மதத்தைச் சார்ந்தவர்கள், 'உலகில் மக்கள் வேறு எந்த நாட்டில் பிறந்தா லும் துறக்கம் (மோட்சம்) இல்லை; தென்னாட்டில் பிறக்கவேண்டும்; சிவாகம நூல்களைக் கற்கவேண்டும்; சிவ அறிவு வாய்க்கவேண்-

டும்; சிவவொழுக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்; சிவ நினைவுடனேயே உயிர்விடல் வேண்டும்.' அப்பொழுதுதான் ஓருயிர் துறக்கம் எய்தும் என்று கருதுவது போல் ஒரு தற்சார்புயர்வுக் கருத்தாகும். அஃதாவது தான் சார்ந்த கருத்தே உயர்ந்தது; பிறர் சார்ந்த கருத்தெல்லாம் அதைவிடச் சிறிது தாழ்ந்தது என்று கருதும் ஒரு மனப்பாங்கு ஆகும். பொதுவாகச் சமயங்களைப் பொறுத்த அளவில், சிவனியத் தற்சார்புயர்வுக் கருத்துப் போலவே மாலியம், கிறித்துவம் முதலிய மதங்களும் கூட அக் கருத்துகளைப் போலவே, வேறு வகையான கருத்துகளைக் கொண்டிருப்பதை உணரலாம். ஆனால் மொழி நிலையைப் பொறுத்த அளவில், இத் தற்சார்புயர்வுக் கருத்து, வேறு "எம் மொழியைக் கற்றவர்களைவிடத் தமிழ்மொழியைக் கற்றவர்களிடம் கொஞ்சம் கூடுதலாக, அஃதாவது பிறர் உண்மையான அறிவைக் காண்பதற்குத் துணை நில்லாத தன்மையில், இருப்பதாகத் தெரிகிறது. இதை ஒருவாறு தமிழ்ச்செருக்கு என்று கூடத் தனிப்பெயர் கொடுத்துக் கூறி விடலாம். ஆனால், இதே செருக்குத்தான், தமிழ் கல்லாத பிறர், அல்லது ஆங்கிலம், அறிவியல் முதலிய வேறு துறைகளில் கற்றவர்கள், வெறும் தமிழ்மொழியை மட்டும் கற்றவர்களை 'ஒன்றுந் தெரியாதவர்கள்' என்று குறைத்து மதிப்பிடச் செய்துவிடுகிறதுஎன்று கூறினால் அது தவறாகி விடாது என்று கருதுகிறோம்.

பொதுவாகவே, தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால், இந்த உண்மையை உணர்ந்து கொண்டுதான் தமிழ் கற்றவர்கள் தங்களை உயர்வாக கருதிக் கொள்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. தமிழ்மொழியின் உண்மையான ஆற்றலை, வலிவை, அதன் இயற்கைத் தன்மையை, அறிவியல் கூறுகளை, மெய்யறிவியல் தெரிப்புகளை ஓரளவேனும் உணர்ந்துகொண்டவர்கள் மிக மிகக் குறைவானவர்களே. அதனை உணர்ந்தவர்கள் சிறிது தன்னடக்கமாகவே இருப்பார்கள் என்று கூடச் சொல்லிவிடலாம். ஆனால் தமிழ்மொழியை மேலோட்டமாகப் படித்துவிட்டு—கற்று விட்டு என்று கூடச் சொல்லமுடியாது—படித்துவிட்டு, அவர்கள் தருக்கிக் கொள்ளும் நிலை இருக்கிறதே; அதை உண்மையாகத் தமிழறிந்தவர்களாலும் கூடப் பொறுத்துக் கொள்ளல் இயலாது. அந்த அளவுக்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்கள் சிலரிடம், (அவர்கள் இங்கிலம் கற்றவர்களாகவோ அறிவியல் படித்தவர்களாகவோ இருப்பார்கள்) இவ்வுலகம் படைக்கப்படவில்லை; படிப்படியாகவே கூர்தலுற்றது; உயிர்களும் அப்படித்தாம் திடுமெனத் தோன்றிவிடவில்லை; படிப்படியாகவே தோன்றி வளர்ச்சியடைந்தது; நிவ்வுலகம் தோன்றுவதற்கு முன்பே கதிரவன் இருந்தது; அதற்கு முன்பே விண்மீன்கள் இருந்தன" என்றெல்லாம் கூறினால் நம்பவே மாட்டார்கள்; அவர்களின் பைபிள் கொள்கைக்கு

மாருக எந்த டார்வினையும், ஐன்சுடீனையும் அவர்கள் ஒப்புக் கொள்ள அணியமாயில்லை. அந்த வகையில் ஐன்சுடீனை விடவோ, டார்வினை விடவோ, அவர்களுக்குப் பைபிளின் படைப்புத் தொள்கைதான் சிறந்தது, உயர்ந்ததாக இருக்கிறது. அது போலவே தமிழ் மட்டும் கற்றவர்களுக்கு, வேறு எவரையும்விட தாங்களே அறிவாளிகள் என்பதும் தாங்கள் படித்த கம்ப இராமாயணமும் வில்லி பாரதமும் திருவிளையாடல் புராணமுமே வேறு எவற்றினும் உயர்ந்த நூல்கள் என்பதும், ஓர் இயற்கையான மனவுணர்வாகப் போய்விட்டது. உண்மையில்லையே, மொழி நிலையைப் பொறுத்தமட்டில், தமிழில், இப்படிக் கருதச் செய்கின்ற மனவுணர்வை உண்டாக்கும் மொழியியற் கூறுகள் ஒன்றும் இருப்பதாகக் கூறிவிட முடியாது. ஆனால் ஏனோ வெறும் தமிழ் மட்டும் படித்தவர்களிடையே இத்தகைய தற்சார்புயர்வுக் கருத்து—அது மட்டுமன்று, பிறர் சார்புத் தாழ்வுக் கருத்தும்— இருந்து வருகிறது; இஃது ஒரு கிணற்றுத் தவளை மனப்பாங்கு தான். ஐயமே இல்லை.

ஆனால், அதற்காகத் தமிழ்ப் படித்தவர்கள் அனைவருமே கிணற்றுத் தவளைகள், ஒன்றுந் தெரியாதவர்கள் என்று கருதி விடுவதற்கில்லை; அப்படிக் கருதிவிடவும் கூடாது. அப்படிக் கருதினால், அது நடுநிலையும் ஆகிவிடாது. பெரியார் போலும் குமுகாயச் சீர்திருத்தக்காரர்கள், இப்படித் தமிழ் கற்றவர்களை வைத்தே, தமிழையும் குறைத்து மதிப்பிட்டார்கள். ஆனால், அஃது அவர்களுடைய பிழை மட்டுமே என்று கூறிவிட முடியாது. பெரியார் அப்படிக் கருதுவதற்குத் தமிழ்ப் படித்த புலவர்களும் ஒருவகையில் கரணியமாக இருந்தார்கள் என்றே சொல்லுதல் வேண்டும். இதை நடுநிலையாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் மறுக்க முடியாது.

கம்ப இராமயணமும் வில்லி பாரதமும் திருவிளையாடல் புராணமும் வெறும் இலக்கிய நூற்கள் மட்டுமே! அஃதாவது கற்பனையும், கருத்தும் உண்மையான வாழ்க்கைக் கூறுகளுடன் கலந்து, ஒரு புத்தம் புதிய நிறைவான கொள்கை வாழ்க்கையை அமைத்துக் காட்டும் ஒரு நூலையே இலக்கியம் என்று சொல்லலாம். இதில் அறநெறி இலக்கியம் என்னும் பிரிவோ சுற்றி வளைக்காமல் நேரடியாக வாழ்க்கைக் கொள்கைகளைச் சொல்வது. கதையிலக்கியமோ சுற்றி வளைத்தும், இலைமறை காயாகவும், அல்லது வெளிப்படையாகவும் தெய்வவியல் பொருத்தம் காட்டியும், அல்லது வாழ்வியல் பொருத்தங் காட்டியும் ஒரு கதை தழுவிக் கொள்கைகளைக் கூறுவது. இராமயண பாரதங்களோ கதையிலக்கியங்கள். இவற்றைப் படித்துவிட்டு, அதில் வரும் உறுப்பினர்களையும் அவர்களின் குறிக்கோள்களையும் மட்டும் கொண்டு, ஒரு கற்பனை உலகைத் தமக்கென்று படைத்துக் கொள்ளும் இலக்கியப் பூச்சிகளாகவே தமிழ்ப் புலவர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது

இந்த நிலையில், தில்லியமான் அறிவியல் உண்மை அவர்கள் உணரவே முடியாது. ஒருமுறை தமிழ்ப் புலவர் ஒருவரிடம் (அவர் பல வகையில் பெரியாரைப் பின்பற்றியும், பகுத்தறிவாளர் என்று தம்மைக் கூறிக் கொள்பவரும் ஆவர்.)—அவரிடம், அறிவியல் பற்றிச் சில கருத்துகளைக் கூற வேண்டி வந்தது. அப்பொழுது—கதிரவன் ஒரு நெருப்புக் கோளம் என்கிறார்களே! அஃது எப்படிப்பட்ட நெருப்பு, தெரியுமா' என்று கேட்டு, 'மிக்க சூடு மிகுந்த அனல் போன்ற, ஆவி போன்ற நெருப்பு என்று கூறினேன். அவர் உடனே, 'இல்லை இல்லை; அப்படி ஒரு நெருப்பு இருக்கவே முடியாது. நாம் அடுப்பில் பார்க்கிறோமே, விறகுக் கட்டையால் ஆன கட்டி நெருப்பு, அதுபோல்தான் கதிரவனும் ஒரு கட்டி நெருப்பு' என்று தருக்கமிட்டார். இதை எதற்குச் சொல்கிறோம். வெறும் தமிழ்ப் படித்தவர்களில் ஒரு சிலர் இராமாயணம், பாரதம் இல்லையேல் 'தமிழ்' என்று பழைமைக் கொள்கை பேசுகின்றனர். சிறிது பகுத்தறிவோடு தமிழ்ப் படித்தவர்கள் என்பவர்கள் அடியோடு, நம்பா மதக் கொள்கையராகித் தமிழைப் பற்றியும் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அறிவியலையும் சரியாக உணராமல், ஒருவகைக் குழப்பக் கொள்கையினராக இருக்கின்றனர். இந் நிலையில் ஆங்கிலம் அல்லது அறிவியல் கற்றவர்கள் வெறும் தமிழ்ப் படித்தவர்கள் என்னும் வகையில் இரு திறத்தாரையும் அவமதிப்புச் செய்கிறார்கள்.

இனி, தமிழ் கற்றவர்கள் அனைவருமே கிணற்றுத் தவளைகள் அல்லர் என்பதை ஆங்கிலம், அறிவியல் கற்றவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். பொதுவுடைமைக் கொள்கையினர், தங்கள் கொள்கையை ஒப்புக்கொள்ளாத அஃதாவது முழுமையாக ஒப்புக்கொள்ளாத—அனைவரையுமே முதலாளியக் கொள்கையினர், அஃதாவது பூர்சுவாக் கொள்கையினர் என்று கூறுவது போல், தமிழ் தெரிந்த அனைவரையுமே ஒன்றாகக் கருதும் மாற்றாந்தாய் மனப்பான்மை அகலவேண்டும். தமிழ்தான் இவ்வுலகத்தின் முதல் தனிச் செம்மொழி. இதைப் பல அறிவியல் துறைகளாலும் ஆய்ந்து பார்த்தாகிவிட்டது. வலிவுள்ள கருவிகளால் இக் கருத்து சரிவரப் பரப்பப்படவில்லையாதலால், வலிவற்ற இதன் எதிர் நிலைக் கருத்துகளெல்லாம் இன்று கற்றவர்களிடமும், கற்ற நாடுகளிடமும் கொடிகட்டிப் பறக்கின்றன. ஆனால் தமிழியல் கருத்துகள் இக்கால் புத்துணர்வு பெற்று வலிவு தலைசுந்து உரமேறி வருகின்றன. எனவே, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று வெறும் இனிமை நோக்கி மட்டுமே, பாரதியார், தெரிந்தோ, தெரியாமலோ, அரைகுறை மனப்பான்மையுடன் ஒப்புக்கொண்ட உண்மை, வேறு பல நிலைகளிலும் மிக மிக விரிவுபட்டதுடன், உலகமே ஒப்பி, வியந்து பாராட்டும் நாள் மிக விரைவில் வரத்தான் போகிறது. வெறும் தமிழ் மட்டுமே எப்படி வாழ்வாகி விடாதோ, அப்படி வெறும் அறிவியல்

ஆரவாரக் கடல் நண்டுகளும் உணர்தல் வேண்டும்; உணரச் செய்தல் வேண்டும். அந்த முயற்சி நடந்து வருகிறது.

தமிழ் கற்றவர்கள் அறிவியலில் ஓரளவு குறைவாக, குறியராக இருந்தாலும், அவர்கள் வாழ்வியலில் பல கூறுகளை, நுட்பங்களை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதில் உண்மையில்லை என்று கூறிவிட முடியாது. அறிவியலும் உளவியலும் தோய்ந்து படிந்து வளராத வாழ்வியலுக்குப் பல தோல்வி நிலைகள் உண்டு; பாலைநிலம் போன்ற அவ் வறண்ட வாழ்க்கையில் ஒரு வறட்சியைத் தவிர வேறு எதனையும் காண முடியாது. தமிழ்மொழி அவ் வறட்சியைப் போக்கிச் செழுசெழிப்பை, ஒரு குளிர்மையை உண்டாக்கித் தரும் வல்லமை சான்றது. அறிவியலையே வாழ்வியலாக மாற்றி மெய்யறிவியலாக உயர்த்தி, மீமிசை மாந்த வாழ்க்கையை உருவாக்கித் தரத் தமிழினும் சிறந்த ஓர் இயற்கை மொழி இவ்வுலகெங்கினும் இல்லை. இதனை உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஆனால், இன்றைய நிலையில் அந்த உண்மைத் தமிழைக் கற்க முடியாதவர்களாக, இயலாதவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதையும், ஒருவகைப் போலித் தமிழையே 'தமிழ்' என்ற பெயரில் படித்து வருகின்றோம் அல்லது பேசி வருகின்றோம் என்பதையும் உணர்தல் வேண்டும். உண்மைத் தமிழ், தூய தமிழ் நம் வாழ்வியலுக்கு, அறிவியல் உணர்வுக்கு, உளவியலுக்கு, மெய்யறிவியலுக்குத் தேவையான அத்தனைக் கூறுகளையும் உண்டாக்கித் தரும் வல்லமை சான்றது என்பதை நாம் உணர மறுக்கின்றோம். கம்ப இராமாயணமும், வில்லி பாரதமும், திருவிளையாடல் புராணமுமே தமிழ் இல்லை. அவையெல்லாவற்றிற்கும் மாறான வேறான ஒரு பெரிய திசைமுகம் தமிழில் உண்டு. அந்நிலை திருக்குறளில் மட்டுமே வித்தாக, மலராக, ஆனால் மிக நுட்பமாக முனைமுகமாகக் காட்டப் பெற்றிருக்கின்றது. அந்த மெய்க் கூறுகளைப் பல்வாறு அழித்துக் கொண்டுள்ளோம். ஏன், திருக்குறளில் மெய்க் கூறுகளையே திரிபுக் கூறுகளாகக் காட்டும் போலி நிலைகளுக்கு அடிமைப்பட்டு விட்டோம். அந்த நிலைகளிலிருந்து மீளும் வரை நாம் உண்மைத் தமிழையும், அதன் ஒளிசான்ற உட்கூறுகளையும் காண முடியாது. எனவே, நாம் இக்கால் படிக்கின்ற தமிழ், கேட்கின்ற தமிழ், பேசுகின்ற தமிழ், நமக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையைத்தான்—ஓர் இழிவு வழக்கத்தைத்தான் கற்பிக்க முடியும். எனவேதான் வெறும் தமிழ்ப் படித்தவர்கள் அதன் உண்மையை உணர முடியாமல், ஒளியைப் பெற முடியாமல், வாழ்வியலிலும் சரி, அறிவியலிலும் சரி, திக்கு முக்காடித் திசைந்து போய்த் திகைப்புற்றுக் கிடக்கின்றனர்.

மெய்த் தமிழ் படித்தவர்கள் பண்பாளர்களாக இருப்பார்கள்; அன்புள்ளவர்களாக இருப்பார்கள்; அறிவுணர்வு மிகுந்தவர்களாக இருப்பார்கள்; ஒருவகை மேம்பட்ட, மீமிசை மாந்த உணர்வில் உயர்ந்த ஒருவகை உணர்வு மிக்கவர்களாக, உண்மை

மாந்தர்களாக இருப்பார்கள். உண்மைத் தமிழில் அன்பின்மை இல்லை; அகங்காரம் இல்லை; அறியாமை இல்லை; அறிவுச் செருக்கில்லை; வாழ்க்கைத் தவறுகள் இல்லை; வழுக்கல் இழிவுகள் இல்லை; கீழ்மை இல்லை; தனக்கே எல்லாந் தெரியும் என்ற கிறுக்குத்தனம் —காரறிவாண்மை இல்லை: இதனை அந்தத் தூய தமிழை உணர்ந்தால்தான், பேசினால்தான், படித்தால்தான் அதோடு பழகினால் தான் உணரமுடியும். வேறு எந்தமொழியாலும் இத்தகைய ஒட்டுமொத்தமான பயன்களைப் பெற முடியாது. இஃது உண்மை. அழிக்க முடியாத உண்மை, இவ்வுண்மைக்கு மாறாக இக்கால் தமிழ்ப் படித்தவர்களிடம் உள்ள குறைகள், அவர்கள் உண்மைத் தமிழைப் படித்தில்லாததால் வந்த குறைகள். உண்மைத் தமிழைப் பேசாமையால் வந்து பொருந்திய குறைக் கூறுகள். எனவே, அவர்களிடம் அன்பில்லை; அறிவில்லை; பண்பில்லை; உலகப் பயன் கருதும் பரந்த நோக்கமில்லை. எனவே தங்களுக்கும், தங்கள் தாய்மொழிக்கும் ஓர் இழிவை, ஒரு பழியைத் தேடிக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்; வாழ்கிறார்கள்.

இந்த உண்மைகளை உடனடியாக யாரும் உணர்ந்து கொள்ளல் முடியாது. அவர்களிடம் உள்ள அறியாமையாகிய இருளும், மனக் கசண்டுகளாகிய மருளும் நீங்கப் பெறுதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்மொழியின் தூய தன்மையை இயற்கைக் கூறுகளை, தனி முதல் உயர்ச்சிகளை உணர முடியும். மொழி என்பது வெறும் எழுத்துகளன்று; உணர்வு. உணர்வு தோன்றிதான் ஒலி தோன்றுகின்றது; ஒலி தோன்றிதான் வடிவம் தோன்றுகின்றது. நம் அன்னையின் படத்தை ஓர் ஓவிய நோக்கில் பார்ப்பது வேறு; உணர்வு நோக்கில் பார்ப்பது வேறு; அதுபோல் தமிழை வெறும் எழுத்து வடிவங்களாகப் பார்க்கும் படப்பார்வை (Photorgra pic sight) உள்ளவர்கள், அதன் உணர்வின்பத்தைப் பெற முடியாது. அதை ஒலி வடிவாக உணர்ந்து, உணர்வு வடிவாகத் தம்முள் கரைத்துக்கொண்டவர்களே, உண்மைத் தமிழை உணர்ந்தவர்கள் ஆவார்கள். வேறு மொழிகளில் இந்தத் திறன் இல்லையா என்று சிலர் கேட்கலாம். அதுதான் இயற்கைக்கும், செயற்கைக்கும், முதன்மைக்கும், வழிமைக்கும், உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு உணர முடியாமல் எழுகின்ற கேள்வியாகும். மிகவும் இயற்கையான தோற்றக் காலத்திலே மாந்தத் தோற்றத்துடனேயே தோன்றி, அவனுடனேயே வளர்ந்து, அறிவார்ந்து உணர்வு மல்கிக் கிளர்ந்து, அவன் போலவே கூர்தலுற்று வாழ்வியலுக்கு வேண்டிய எல்லா நிலைகளிலும் விளங்கி நிற்பது, தமிழ். நன்றாக உயர்ந்து, வளர்ந்து விரிந்து புடைபரப்பி விசும்பளாவி நின்று பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கும் ஆலமரம் போன்றது இது. பிற மொழிகள் அவ்வாறின்றிப் பிந்தித் தோன்றி, நல்ல வளர்ச்சி யெய்தாமல், உணர்வுப் பிதுக்கமுற்றுத் திரிந்து வளர்ந்து, முரடும் முறுக்குமுற்று முடக்கிளைகள் பரப்பி வளர்ந்து வரும் காட்டு மரங்கள் போல்வன. எனவே, அவற்றின் நல்ல கூறுகளைவிட

ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிரான
அனைத்து முரண்பாடுகளையும் கூர்மையாக்குவோம்!

தமிழக மக்கள் விடுதலைப் போராட்ட முனையில் ஒருங்கிணைப்போம்!

இந்தியத் தேசியமும் பார்ப்பனிய முதலாளியமும்:

ஒவ்வொரு தேசியத்திற்கும் இனவியல் சார்ந்த ஒரு வரலாற்றுப் பின்னணியும், பொருளியல் சார்ந்த ஒரு வகுப்பு உள்ளடக்கமும் இருப்பதை யாரும் மறைத்துவிட முடியாது. வெவ்வேறு இனக்குழுக்கள் (சாதிகள்) ஒரு வளர்ச்சியடைந்த தேசிய இனங்களாக உருவாகாத நிலையிலும், ஒவ்வொரு பகுதியிலும் ஆளுமை செலுத்திக் கொண்டிருந்த சிற்றரசர்களுக்குள்ளும் பேரரசர்களுக்குள்ளும் ஏற்பட்ட முரண்பாடுகளைப் பயன்படுத்தியும், இந்தியத் துணைக் கண்டத்திற்குள் புகுந்த ஆரியர்கள் படிப்படியாகத் தங்கள் ஆளுமையை நிலைநாட்டத் தொடங்கினர். அந்தந்தப் பகுதி மக்களும் மன்னர்களும் பின்பற்றிய மதவியல் கோட்பாடுகளான சிவனியம், மாலியம், சமணம், போன்றவற்றை உள்ளடக்கிக் கொண்டும்; மொழி பண்பாடு, கலை, நாகரிகம் போன்றவற்றைத் தம்வயப்படுத்திக் கொண்டும் அரசர்களிலிருந்து ஆண்டிகள் வரை அனைவரையும் இன்று வரை ஆட்டிப்படைக்கின்றனர். இந்த மண்ணோடும் மக்களோடும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாந்தர்க்குப் பயன்படும் மேலாம் மாந்த உணர்ச்சிகளைவிட தமிழில் உள்ள கூறுகள், இயற்கை உணர்ச்சிகள் செப்பமுற்றன; மேம்பட்டன; உயர்ந்தன; சிறந்தன என்பதில் சிறிதும் மிகையில்லை என்று உணர்தல் வேண்டும்.

எனவே தமிழுக்காக மட்டும் 'தமிழ்' என்னும் நிலையில் உள்ள போலித் தமிழைப் படிக்காமல், உணர்வுக்காக, உள்ளத்தின் ஒளிக்காக, வாழ்க்கை மேம்பாட்டுக்காக, பண்புக்காக அன்புக்காக, அறிவுக்காக, ஒட்டுமொத்தமாக உயர்ந்த உயிர் விளக்கத்திற்காக நாம் தமிழைப் படிக்கவேண்டும்; கற்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் கற்றவர்களைத் தமிழைத் தாழ்வாகக் கருதும் புன்மை மனப்பான்மை விலகும் என்று உணர்ந்து கொள்ளல் வேண்டும். இனி, தமிழைப் படிக்க விரும்புகிறவர்கள், வெறும் தமிழ்மொழியை மட்டும் படிக்காமல், ஈண்டுள்ள அனைத்து அறிவியல் துறைகளையும் கற்று, அவற்றுடன் தமிழ் மொழி நிலைகளை இணைத்துப் பார்த்து, உண்மை தெளிவு வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும்; மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(தெ.மொ-சு:16 ஓ:8) பெருஞ்சித்திரனார்.

ஒட்டாத ஆரியப் பார்ப்பனர்கள்; அவர்களுக்குப் பின்னர் வெவ்வேறு காலகட்டங்களில் வெளியிலிருந்துவந்த இனங்களின் ஆளுமையருக்கு அடிபணிவதைப் போல் நடித்து, இறுதியில் இந்தியத் துணைக்கண்டத்தை ஆண்ட ஆங்கிலேயரிடம் இருந்தாடி, 1947-க்குப் பிறகு ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்ட-னர்; இன்றுவரை வேற்று இனக்கொள்ளையர்களுக்கு தரகராகவே இயங்குகின்றனர். இந்தியத் தேசியம் என்பது சாதிய ஏற்றத் தாழ்வையும், பல்வேறு மதக் கோட்பாடுகளையும் உள்ளடக்கிய இந்து(இழி)மதத்தைத் ஆளுமை செய்கின்ற பார்ப்பனர்களையும், பல்வேறுநாட்டினங்களின் பொருள் வளத்தைச் சுரண்டி ஆளுமை செய்கின்ற பெரு முதலாளிகளையுமே குறிப்பதாகும். ஆகவே இந்திய தேசியத்தின் உள்முகம் பார்ப்பனிய முதலாளியமேயா-கும். இதனாலேயே மதவியலைப் புகட்டுகின்ற பார்ப்பனர்களும் அறிவியல் படித்த அறிஞர்களும், பாட்டாளியம் மலர வேண்டு-மென்று உதட்டளவில் பேசுகின்ற பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களும், பெரு முதலாளிகளும் இந்தியத் தேசியத்தில் ஒருங்கிணைகின்றனர். இந்தச் சூழ்ச்சியறியாமல் மக்கள் நலச் சிந்தனையாளர்கள் தடுமாறுகின்றனர்.

எப்படி இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் விழுங்கிச் செரிக்க முடியாமல் ஆரியப் பார்ப்பனியம் திணறிக்கொண்டிருக்-கின்றதோ, அவ்வாறே தமிழ்த் தேசியத்தை விழுங்கி ஏப்பமிட தமிழரல்லா முதலாளிகள் துணிந்த அரசியல் வரலாறுதான் திராவிட தேசியம். தமிழ் மொழியிலிருந்து கிளைத்து வளர்ந்த பல்வேறு மொழிகளைக் குறிப்பதற்கு, தென் மற்றும் வடதிராவிட மொழிக் குடும்பம் என்று மொழியியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்தையொட்டியும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்-பகுதியிலிருந்த தமிழ்நாடு, கேரள நாடு, கன்னட நாடு, தெலுங்கு தேசம் ஆகியவற்றின் அரசியல் ஆளுமைத் தலைமையிடம் சென்னை யாக இருந்த நிலையையொட்டியும்; குமுக நிலையில் பார்ப்பனர்-களுக்கு எதிராகவும், பொருளியல் நிலையில் வடநாட்டு முதலாளி-களுக்கு எதிராகவும் திராவிட தேசியத்தை முன்னிலைப் படுத்தி-னர். இதில் தலைமை தாங்கியோர் தெலுங்கு மொழி பேசுகின்ற முதலாளிகளேயாவர். நான்கு மொழித் தேசிய இனங்களும் மொழி மற்றும் பண்பாட்டு நிலைகளில் நெருங்கிய உறவினர் என்பதை மறந்துவிட்டு, திராவிடத் தேசிய உணர்வை தமிழகத்தில் மட்டும் புகுத்தினார்களே தவிர, மற்ற இனங்களில் இவ்-வுணர்வு வளரவே இல்லை. தமிழரல்லா மக்கள் இங்கு ஒரு குறிப்-பிட்ட தொகையில் இருந்தும், சிலர் பொருளியல் நிலையில் வலு-வாக இருந்தும் தமிழகத்தின் வளமைக்கும் உரிமைக்கும் போதிய அளவு குரல் கொடுப்பதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக சென்னை நகரத்தில் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவு செய்கின்ற தெலுங்கு நாட்டு கிருட்டிணா ஆற்றுநீர்த் திட்டத்தை நிறைவேற்ற முழுமையாக ஒத்துழைப்பதில்லை. அவ்வாறே தொடர்ந்து தொட்டு

[illegible]

கிடைத்துக் கொண்டிருந்த காவிரி நீர் மறுக்கப்படும்போதும், இறுதி யாக உச்ச நெறி மன்றம் அளித்த தீர்ப்புக்காக ஏதுமறியாத் தமிழ் மக்கள் கர்நாடகத்தில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியும் தமிழகத்தின் பெரும்பகுதி நீரின்றிக் குடிநீருக்கும் வேளாண் மைக்கும் தவிக்கும்போது, வீணாகக் கடலில் கலக்கும் நீரைத் திருப்பிவிடக் கேரள அரசு மறுப்பதுமாகும். மேலும் தமிழினத் தின் ஒரு பிரிவினராகிய தமிழ் ஈழமக்கள் சிங்கள அரசால் படுகொலை செய்யப்படும்போது அந்த இனங்களைச் சேர்ந்தவர்கள் கவலைப்படுவதேயில்லை. ஆகவே இனிமேலும் தமிழகத்தில் திராவிடத் தேசியம் பேசிக் கொண்டிருப்பது தமிழரல்லா முதலாளியத்திற்கு வலுச் சேர்ப்பதேயாகும்.

தமிழ்த் தேசியமும் இந்தியத் தேசியமும் :

தமிழ் இன மக்களின் ஒரு பிரிவினராகிய தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இடையில் ஆரிய வெறியன் இராசீவ்காந்தி என்னும் இனப்படுகொலையாளன் தமிழ் மண்ணில் வீழ்த்தப்பட்ட பிறகுதான், தமிழின எழுச்சி உலக அரங்கிற்கு வெளிப்படுத்தப்பட்டது. தமிழ்த்தேசிய இன எழுச்சியை இனி எந்த இந்தியத் தேசியத்தாலும் திராவிடத் தேசியத்தாலும் மறைத்துவிட முடியாது என்பதே பார்ப்பனர்க்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் வரலாறு உணர்த்தும் பாடமாகும். இன்று பார்ப்பனச்செயலலிதாவின் காலில் விழுந்து பொறுக்கித்தின்னும் தமிழின இரண்டகர்களை நாளைய தமிழின மக்கள் காறித் துப்பு-வதற்கு அணியமாகவே இருக்கின்றனர். இந்தியத் தேசிய சார்-புள்ள எவருக்கும் இந்தத் தமிழ்மண்ணில் இடமில்லாத நிலையை உருவாக்கினால்தான் நாம் தமிழ்த் தேசிய இன மக்களின் விடுதலையை உறுதிப்படுத்த முடியும்.

இந்தியத் தேசியத்திற்குப் பின்னணியாக இந்து மதத்தைக் கட்டிக் காக்கின்ற ஆரியப் பார்ப்பனர்களின் சமசுக்கிருத மொழி-யும், வேதங்களும் புராணங்களும் எவ்வாறு முன்னிலைப்படுத்தப் படுகின்றனவோ, அவ்வாறே நம் தமிழ்த் தேசியத்தைக் கட்டிக் காப்பதற்கு, நம் மக்களை இணைக்கின்ற தமிழ்மொழியையும் பண்பாட்டையும் கலையையும் முன்னிலைப்படுத்தவேண்டும். இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதாகவும், அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்குத் தடை-யாகவும் இருப்பதைக் குமுகச் சிந்தனையாளர்களின் ஆய்வுகளிலி-ருந்தும், நடைமுறை அரசியல் போக்கிலிருந்தும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். ஆயினும் குமுக நிலையிலும் பொருளியல் நிலையிலும் மேல்நிலையிலுள்ள தமிழினத்தவர் இன்னும் ஆரியப் பார்ப்பனியச் சார்போடும், இந்தியத் தேசியச் சிந்தனையோடும் இயங்குவது தங்களின் வகுப்பு நலனைக் காத்துக் கொள்வதற்-காகவேயாகும். இவர்களே தமிழக மக்களுக்கு எதிரானவர்கள் என்பதை நாம் மக்களுக்கு விளக்கிக் காட்டவேண்டும்.

தமிழக மக்கள் விடுதலைக்கு கூர்மையாக்க வேண்டிய உள்முரண்பாடுகள்: 1. மொழி:

தமிழர்களை உளவியல் வழியாக இறுகக் கட்டமைப்பது நம் தமிழ்மொழியேயாகும்; இதனாலேயே தமிழினத்தைத் தொடர்ந்து ஆளுமை செய்கின்ற ஆரியப் பார்ப்பனர்களும், மற்றவர்களும் முதலில் மொழியின் கட்டமைப்பைப் பல வழிகளில் சிதைத்திருக்கின்றனர்.

நம் இறை வழிபாட்டிலும் கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் தமிழை ஒதுக்கி பார்ப்பனர்களின் மொழியான சமசுக்கிருதத்தைப் புகுத்தியிருக்கின்றனர். நாமும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நமக்கு விளங்காத வடமொழியையே உயர்வாக எண்ணிக்கொண்டு, நம் உழைப்பையும் பொருளையும் பார்ப்பானிடம் கொடுத்துவிட்டு, அவன் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றோம்.

பொதுவாக மொழியின் இன்றியமையாமை பற்றியும் சிறப்பாகத் தமிழ்மொழியின் தனித்தன்மை பற்றியும் நம் பாவலரேறு கீழ்க்காணுமாறு விளக்குவார்.

"மாந்த இனத்தின் அகப்புற வளர்ச்சிக்கான பல்வேறு கூறுபாடுகளில் மொழி ஓர் இன்றியமையாத உறுப்பாகும். உடல் வளர்ச்சிக்கு எப்படி உணவு முகாமையானதோ, அப்படியே உள்ளத்தின் வளர்ச்சிக்கு மொழி முகாமையானதாகும். ஏதோ ஒரு வகையில் மொழியைச் சுவறிக் கொள்ளாத உள்ளம் வளருவதேயில்லை. மக்கள் தங்களுக்குள்ள கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருவி என்பதாக மட்டும் மொழியை மதிப்பிட்டு விடக் கூடாது. மொழியின் சிறப்பான பயன்களுள் கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் தன்மையும் ஒன்றாக விருக்கின்றதே தவிர, அஃது ஒரு கருவி என்னும் அளவில் மட்டும் அதன்பயன் அடங்குவதன்று.

"மொழிக்குள்ள சிறப்பியல்கள் அத்தனையும் விளங்கித் தோன்றும் முழு வளர்ச்சியுற்ற உலகின் சில மொழிகளில், தமிழ் மொழி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் தனித் தன்மை ஓர் இனத்தின் வரலாற்றையே உள்ளடக்கியதுடன், உலக மொழிக் குடும்பத்தின் பரந்துபட்ட தன்மைக்கே ஒரு மூல ஊற்றாக விளங்குகின்றது. இது மிகையான ஒரு கூற்றாக இல்லை என்பதை, இதன் பல்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளையும் அவை தொடர்ந்த பிறமொழித் தோற்றங்களையும், அறிவுக் கசடின்றி அறிந்து கொண்டவர்களே உணர முடியும். காலத்தாலும் அறிவாலும் நன்கு காத்துப் புரக்கப்பெற்ற மொழி தமிழாகலின், அஃது உலகிலுள்ள மொழிகளைவிட திட்பமும், நுட்பமும், செழுமையும் முழுமையும் நிறைந்து விளங்குவதை இக்கால் எல்லா மொழியினரும் உணர்ந்து வருகின்றனர். அஃது ஒரு வரலாற்றுப் பெட்டகம் போல் இருந்து மாந்தனின் மன வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து

அறிவுக் கருவூலங்களையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. அது காரணியப் பொருளாய் நின்று உள்ளுணர்வொடு கலந்த, அகக் கரண வளர்ச்சிக்கும், கருமப் பொருளாய் விளங்கி உறுப்பொடு கலந்து நின்று புறக் கரும வளர்ச்சிக்கும் அடிப்படையாக விருக்கின்றது.''

ஆரியப் பார்ப்பனர்கள் தங்களை மறைத்துக் கொண்டு,மற்றவர்களின் கண்களையும் கருத்தையும் குருடாக்கித் திசை திருப்பிக் கொண்டுள்ளவற்றுள் தலையானது மொழிப்புலமேயாகும். தமிழ் நாட்டின் நிலவியல் மற்றும் தொழிலியல் அமைப்பிற்கேற்ப விளங்கிய மக்கள் பெயர்கள், ஊரின் பெயர்கள், நகரத்தின் பெயர்கள், ஆறு,கடல், மலைகளின் பெயர்கள், பயன்படு பொருள்களின் பெயர்கள் கடவுளின் பெயர்கள் அனைத்தும் ஆரியமயப் படுத்தப்பட்டு விட்டதாலும்; தமிழர்களின் அடையாளங்களில் பெரும்பகுதி அழிக்கப்பட்டுவிட்டதாலும் தமிழர்கள் வழிதெரியாது தடுமாறிக் கொண்டுள்ளனர். வழிகாட்ட வந்த தலைவர்களு சரியான வழியைக் காட்டாமல் குழப்பிவிட்டனர். ஆதலே ஆரியப் பார்ப்பனியப் பிடிப்பிலிருந்து விடுபடத் துடிக்கும் ஒவ்வொருவரும் முன்னிலைப்படுத்த வேண்டியதில் முதன்மையானது தூய தமிழ்மொழியேயாகும்.

2 இனம்: பெரும்பாலும் மொழியை அடிப்படையாகக் கொண்டே ஒரு பகுதி மக்களின் இனப்பெயர் சுட்டப்படுகின்றது. மொழியையும் அம்மொழியைப் பேசுகின்ற இனத்தின் அடிப்படையிலேயே உலகில் பெரும்பான்மையான நாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவாகாத நிலையில்,வேற்று இனங்களின் ஆளுமையில் உள்ள இனங்கள் தங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கப் போராடிக்கொண்டிருக்கின்றன. தமிழினம் ஒரு தனித் தேசிய இனம் என்பதைப் பிளப்பதற்கும் மறைப்பதற்கும், சாதி நிலையிலும், மத நிலையிலுமே சில சலுகைகளையும் உரிமைகளையும் அறிந்து இன்றைய இந்தியப் பார்ப்பனிய அரசு பிரித்தும் ஒடுக்கியும் ஆளுவதை நாம் அறியலாம். இன அடிப்படையில் மக்கள் ஒன்றிணைந்தால் அடுத்த கட்ட தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு இடமளித்துவிடும் என்பதால், ஆரியப் பார்ப்பனர்களும், பெரு முதலாளிகளும் சாதியத்தையும் மதத்தையுமே தூக்கிப் பிடிக்கின்றனர், இன்று இந்தியா முழுமையும் ஒவ்வொரு தேசிய இனத்திலும் பார்ப்பனிய முதலாளியத்திற்கு எதிராக எழுகின்ற மக்களின் போராட்டங்களை; சாதிய மோதல், மதவியல் மோதல் என்று திசை திருப்பி விடுகின்றனர். சில பகுதிகளில் அரசே சாதி, மதப் போராட்டங்களைத் தூண்டி விடுவதையும், இனவியலாக எழும் போராட்டங்களை ஒடுக்குகின்றதையும் நாம் பார்க்கலாம். ஆகவே இந்திய ஆளும் வகுப்புகளைத் தூக்கிப் பிடிக்கின்றதோ, அதற்கு எதிரான நிலைப் பாட்டை நாம் எடுக்கவேண்டும். அதாவது. இந்திய ஒருமைப் பாட்டையும் இந்தியப்(பார்ப்பனிய)பண்பாட்டையும் அவர்கள்

வலியுறுத்தும்போது, நாம் தேசிய இனங்களின் விடுதலையையும் தமிழ்ப் பாட்டாளியப் பண்பாட்டையும் வலியுறுத்த வேண்டும்.

3. நாடு : நாம் ஒரு சிற்றூரில் குடியிருந்தாலும் அல்லது ஒரு நகரத்தில் குடியிருந்தாலும், ஒரு பொது மொழியையும் பண்பாட்டையும் இனத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு நாட்டிற்குரியவராகக் காட்டப்படவில்லை. தமிழ்நாடு, மலையாள நாடு, கன்னட நாடு, தெலுங்கு நாடு, பஞ்சாபு, காசுமீரம், வங்காள தேசம், அசாம் தேசம் போன்ற எல்லா நாடுகளும்; இந்தியா, பாரதம், இந்துத்தான், ஆரிய வர்த்தம் என்ற ஆரிய பார்ப்பனியக் கட்டுப்பாடுடைய நாட்டிற்குள் அடக்கப்பட்டிருப்பதை ஒவ்வொரு நாட்டவரும் உணருகின்ற காலம் வந்துகொண்டிருக்கின்றது. இன்று ஒரே மொழி, ஒரே இனம், ஒரே நாடு, ஒரே சட்டம் என்று ஆரியப் பார்ப்பனர்கள் கூப்பாடுபோடுகின்றனர். அதாவது ஒரே மொழி என்பது சமசுக்கிருத மொழியாகவும், ஒரே இனம் என்பது ஆரிய இனமாகவும், ஒரே நாடு என்பது பாரதம் ஆகவும், ஒரே சட்டம் என்பது ஒரு குலத்துக்கு ஒருநெறி சொல்கின்ற மனு-தருமமாகவும் இருக்க வேண்டுமென்று துடிக்கின்றனர். தங்களின் இந்தியத் தேசியத்திற்கும் இந்துமதக் கொள்கைக்கும் எதிராக இயங்குகின்ற தேசிய இனச் சிந்தனையாளர்கள், வேற்று மதக் கொள்கையாளர்களில் சிலரைத் தங்களுக்குச் சார்பான அடிவருடிகளாக உருவாக்கிக் கொண்டும், எதிர்ப்பாளர்களை அரசுக் கருவியைக்கொண்டு அழித்தும் தங்கள் ஆளுமையைத் தொடர்ந்து செலுத்துகின்றனர். தமிழ்த் தேசிய இனச் சிந்தனையாளர்களும், பாட்டாளியச் சிந்தனையாளர்களும் இவ் விந்தியச் (பார்ப்பனிய) சூழ்ச்சியை உணர்ந்து செயல்படவேண்டும்.

4. சாதியும் மதமும் : இன்று ஒவ்வொரு தேசிய இனத்திற்குள்ளும் வெளிப்படையாகவும் முதன்மையாகவும் இருக்கும் குமுக முரண்பாடு சாதியமேயாகும். இச் சாதிப் பிரிவினை இருக்கும் வரை பார்ப்பனியமும் உயிர் வாழும்; நாமும் முழு உரிமையைப் பெறமுடியாது. ஒரே சமயத்தில் ஒரு சாதியைச் சேர்ந்தவன் மற்றொரு சாதியைச் சேர்ந்தவனுக்கு அடிமையாகவும், இன்னொரு சாதியைச் சேர்ந்தவனுக்கு ஆண்டையாகவும் இருப்பதை இந்த இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலும் பார்க்க முடியாது. இதற்கான உளவியல் நிலைத்திருப்பதற்கான மதவியல் கருத்துகள் தொடர்ந்து புகுத்தப்பட்டு வருவதையும், இன்றைய பார்ப்பனிய முதலாளிய வகுப்பு நலனுக்கு ஒரு தடுப்புச் சுவராகவும் சாதியத்தை அரசு கட்டிக் காக்கின்றது. இவற்றையே இக்கட்டமைப்பை உடைப்பதற்கான கருவிகளாகப் பயன்படுத்துவதற்கு நாம் முயல வேண்டும்.

இந்துமத ஒற்றுமையை உதட்டளவில் சொல்லிக் கொண்டு உள்ளுக்குள் தங்கள் ஆளுமையைச் செலுத்தத் துடிக்கும் பார்ப்பனர்களும் மற்ற மேல்சாதியரும் வேற்று மத மக்களுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களைத் திரட்டு-

கின்றனர். கிறித்தவத்திற்குள் சாதியம் புகுந்து அது சீரழிந்துவிட்டதாலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஆளுமையருக்குத் தாங்கள் சார்பாக இருப்பதாலும், கிறித்தவ மதத்தை நேரடியாகப் பார்ப்பனர்கள் எதிர்ப்பதில்லை. ஆனால் சாதியத்திற்கு எதிரான இசுலாம் மதக் கொள்கை பரவினால், தங்கள் இந்துமத வல்லாண்மை ஆட்டங்கண்டு விடும் என்பதை உணர்ந்து அதை முதலில் எதிர்க்கின்றனர். மேலும் முன்பு எப்படிச் சாதியத்திற்கு எதிராகக் கிளம்பிய சமண மதத்தையும் புத்த மதத்தையும் இந்த நாட்டை விட்டே விரட்டியும், அவர்களைக் கொன்றும் அழித்தார்களோ, அதே கொள்கையைத்தான் ஆரியப் பார்ப்பனர்கள் இன்றும் கையாள்கின்றனர். தன் விரலைக் கொண்டே தன் கண்ணைக் குத்துவதைப் போல் பார்ப்பனிய மதத்தால் பாதிக்கப்படுகின்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களே தங்களைத் தாங்களே அழிப்பதற்கும், மற்ற மதத்தினரை ஒழிப்பதற்கும் பயன்படுகின்றனர்.

1-5-1993—இல் திருச்சி—திருவரங்கம் கோயிலில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தார் நடத்திய கருவறை நுழைவுப் போராட்டம் பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும், பார்ப்பனரல்லாத மேல்சாதியரின் அடிமைத்தனத்தையும் வெளிக் காட்டின; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்களையும் தங்கள் தாய்மொழியான தமிழையும்; சூத்திரர் என்றும் கடவுளுக்கு ஏற்காத இழிமொழி என்றும் ஒதுக்கி வைத்த கொடுமையை எண்ணிப் பார்க்காமல் மேல்சாதியர் இப்போராட்டத்திற்குப் போதிய ஆதரவு தெரிவிக்கவில்லை. மேலும் அன்று தேங்காய் உடைப்பு வழிபாடு என்று மற்ற மக்களைத் திரட்டித் தாழ்த்தப்பட்ட மக்களை விரட்டத் திட்டம் போட்டனர் பார்ப்பனர்கள், இசுலாமியரை எதிர்ப்பதற்குத் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களைத் திரட்டும் பார்ப்பன இந்து முன்னணி, இப் போராட்டத்தில் ஒருவருக்கு எதிராக மற்றவரை நிறுத்தியது. திருச்சியைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்புச் சார்பில் உள்ள கு.ப. கிருட்டிணன் என்ற பார்ப்பன அடிவருடி அமைச்சர் இப்போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்குவதாக கூறியுள்ளார். ஆக இதிலிருந்து நாம் இந்துக்கள் அல்ல என்பதையும், பார்ப்பனரைத் தவிர வேறுயாருக்கும் கருவறைக்குள் செல்லத்தகுதி இல்லையென்பதையும், இதற்குப் பாதுகாவலராக இந்து மதமும் இந்திய அரசியல் சட்டமும் இருப்பதையும் தமிழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அரசியல் சட்டம் வகுத்த அண்ணல் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசுப்பதவியிலும் அரசியல் பணியிலும் சில இட ஒதுக்கீடு செய்ததைத் தவிர, பார்ப்பனியத்தின் ஆணிவேரை அவரால் அசைக்க முடியவில்லை. இதுபோன்ற போராட்டங்களை பல இடங்களில் நடத்திப் பார்ப்பனியத்திற்கு எதிரான முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்த வேண்டும்.

உழைக்கும் மக்களும் உழைக்காத பார்ப்பனர்களும் :

மக்கள் உயிர் வாழ்வதற்கும் மற்ற தேவைகளை நிறைவேற்று வதற்கும் பல்வேறு தொழில்களில் கடுமையாய் உழைக்கின்ற உழவர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள் அனைவரும் குமுக நிலையில் உழைக்காத பார்ப்பனர்களுக்கு அடிமையாக இருப்பதை நாம் ஒவ்வொரு பிரிவினரும் உணர வேண்டும். நம்மை ஆளுமை செய்கின்ற இந்துமத நிலையிலும், அரசியல் நிலையிலும், அதிகார வகுப்பு நிலையிலும் மேலே இருந்து கொண்டு நம்மை ஆட்டிப் படைக்கின்றனர். உழைக்கின்ற மக்களுக்கு எந்த வகைப் பயனும் முழுமையாகப் போய்ச் சேராமல் தடுக்கின்றனர். உழைக்கின்ற பலகோடி மக்களை இழி பிறவிகள் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, இன்று நாடெல்லாம் 'இந்து' என்றும் 'இந்தியர்' என்றும் பார்ப்பனியப் பூணூலை மாட்டுகின்றனர்; உழைக்கின்ற மக்களை வறுமையில் தள்ளிவிட்டு, ஆட்சியாளர்கள் 'வறுமைக் கோட்டை' அளந்து திரிகின்றனர்; தங்களின் செல்வச் செழிப்பை மேலும் வளர்க்கின்றனர். இந்தியாவைப் பொறுத்தவரை ஆரியப் பார்ப்பனியத்தைத் தகர்த்தாலே உழைக்கின்ற மக்களுக்கு எல்லா உரிமைகளும் கிடைப்பதற்கான வழி பிறக்கும்,

அறிவியலும் பார்ப்பனிய மூட நம்பிக்கைகளும் :

அறிவியல் வளர்ந்த இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே, எங்கோ இருக்கின்ற அயோத்தியில் இராமனுக்கு கோயில் கட்டவேண்டுமென்று, இந்தியா முழுவதும் செங்கல்பூசை நடத்தியும், காட்டை ஆண்ட இராமனின் செருப்பு என்று அதற்குப் பூசை நடத்தியும் இந்தக் காட்டு விலங்காண்டித்தனத்திற்கு, வானொலியும் தொலைக்காட்சியும், பார்ப்பன செய்தித்தாள்களும் நாள்தோறும் மிகுந்த விளம்பரம் செய்தும், இறுதியில் பாபர் பள்ளி வாசலையும் பார்ப்பன அரசின் துணையோடு இடித்துத் தள்ளினார்கள். இன்னும் இந்தியா மதச்சார்பற்ற குடியரசுநாடு என்று இங்குள்ள மக்களையும் உலக நாடுகளையும் பார்ப்பனிய அரசு நம்ப வைக்கின்றது. இந்தியாவில் ஏராளமான இயற்கை வளங்கள் இருந்தும், கடுமையாக உழைக்கும் மக்கள் இருந்தும், இவைகளை முறையாகப் பயன்படுத்த முடியாமல் எந்த ஒரு மாந்தநேயப் பற்றும் இல்லாத பார்ப்பனியக் கொடுநெறிக்குள் மக்கள் சிதைக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் சங்கரமடத்தில் இருந்துகொண்டு சாதிய நச்சுக் கருத்துகளைப் பரப்புகின்ற சங்கராச்சாரிக்கு உலகக் குருஎன்ற பட்டம்; எந்தப்பற்றுமில்லாத பார்ப்பன முனிவருக்குத் தங்கக் காசுகளால் குளிப்பாட்டுதல், இதற்குக் குடியரசுத் தலைவலிருந்து, பார்ப்பன அதிகாரிகள், அடிவருடிகள் அனைவரும் அவரிடம் ஆசிபெற வருகின்றனர்: எதையும் இந்த மக்கள் ஏற்றுக் கொள்வார்கள், தட்டிக் கேட்கமாட்டார்கள் என்ற திமிரில் பார்ப்பனர்கள் தங்கள் காட்டாட்சியை ,நடத்திக்கொண்டிருக்-

(தொடர்ச்சி 29-ஆம் பக்கம்)

தமிழ் இலக்கிய நோக்கு.

—பறம்பை அறிவன்.

இலக்கியம்தானே இதில் என்ன, தமிழ் இலக்கியம்? இப்படி, இனம் சாராது பேசுகின்றவர் உண்டு. இவர் தம் படைப்பிலும், எழுத்திலும் இனம் சார்ந்த சிந்தனை வடிவம் பெற்றிருக்கும். மொழி-இனம் இரண்டிலும் பட்டுத் தோயாத எழுத்து இல்லை என்றே கூறி விடலாம். ஆனால். இனத்திற்கு எதிராக நிழல்போர் நடத்தும இன மறுப்பாளர் இரண்டக நிலைக்கு ஆளாகிப் போவர். இனத்தில் ஊன்றி நின்ற வள்ளுவம் தமிழர்க்கும், மக்களினத்திற்கும் குறிப்பாகவும், பொதுவாகவும் பயன்படுவது கண்கூடு.

தமிழ் இலக்கியம் 'தமிழினத்தைத்' தூக்கி விடுவதாக இருத்தல் வேண்டும். 'தூக்கி விடுவது' 'என்பது 'கொலை பண்ணுவது' என்ற பொருள்வரும்படி நடைமுறையில் உள்ளது!

தமிழ் இலக்கியம், இனத்திற்கும், உலகிற்கும் புதிய நலன்களை வழங்க வேண்டும். அத்தகைய தன்மை, 'தமிழ் இலக்கியம்' எனப் படும் இக்காலப் படைப்புகளுக்கு உண்டா என்பது ஒரு கேள்வி தான்! இனநலம் பேசும் படைப்புகளை அறிவாளிகள் எனப்படுகின்றவர் புறக்கணிப்பதும் காண்கிறோம். காரணம், வணிக நோக்கம், இன்றைய கருவி வளர்ச்சி உலகில், இலக்கியப் படைப்புகளிலும் புகுந்து விட்டதுதான்.

> ''நான் எப்படிக் காண்கிறேனோ(தரிசிக்கிறேனோ) அதை இ
> அப்படியே என் நோக்கில் உங்களுக்குக்
> காட்ட விரும்பும் முயற்சியே எனது கதைகள்''

—செயகாந்தன்- மேற்கோள்: கோ. கேசவன், தமிழ்ச் சிறுகதைகளில் உருவம். பக்—18

செயகாந்தன் கூறிய இந்த வரிகள் அவரையும் அவர் சிந்தனை முறையையும் தெளிவுபடுத்த வல்லவை.

எழுத்தாளனின் 'நான்', அவர்க்குள்ள தன்னம்பிக்கையைத் புலப்படுத்துகிறது.

எப்படிக் காண்கிறாரோ (தரிசிக்கிறாரோ) அப்படியே கண்டு கொள்ளும் அவர், தனது நோக்கையும் அதில் காட்டுகிறார் எனலாம். காண்பது என்பதில் இல்லாத பொருள் 'தரிசித்தலில்' உள்ளதென்று கருதுகிறார் அவர். செயகாந்தனின் காட்சி மீதான ஈடுபாட்டைத் தெரிந்து கொள்ள அச் சொல்லாட்சியை அவர் கையாண்டிருக்கக் கூடும். எழுத்தாளனின, 'எனது நோக்கில்' குழுகப் பார்வையும் உள்ளதாகும். ஆயினும், அவர் தமது பார்வைக்குச் சொந்தம் கொண்டாடியுள்ளார். இதில் அவர் 'பொதுமை' கொண்டவரல்லர் என்பது தெளிவு.

'உங்களுக்குக் காட்ட விரும்பும் முயற்சி' என்பதில் அவர் படைப்பாளராக இருந்து ஆசிரிய—குரு நிலைக்குத் தம்மை உயர்த்திக் கொண்டு, 'படிக்கிறவனை'ப் பார்க்கிறார். ஆயினும், இதனை 'முயற்சி' என்ற அளவில் 'அடக்கம்' காட்டுகிறார். 'என்து கதைகள்' என்ற அவர் படைப்புகளைப் பற்றிய உருக்கம், 'மக்களின கதைகளாக' மலர முடியாமல் போனதைக் காட்டும்!

அறிவாளிகளும், படிப்பாளிகளும், செயகாந்தனைப் பிடித்துத் தொங்கினார்கள். மக்களை மறந்து போனார்கள். தமிழின நலத்தைக் கைவிட்டு விட்டார்கள்!

'காட்டுகிறேன் காண்; நான் கண்டபடி நீயும் காண்' என்கிற படைப்பாளிகள், உண்மையான மாறுதலுக்கும் மொழி, இன ஏற்றத்திற்கும் என்ன செய்தார்கள்? இவர்களின் படைப்புகள் செய்தது என்ன? கிழித்தது என்ன? வினாக்கள் எழுகின்றன.

"தமிழில் புதினம், சிறுகதை, புதுப்பா (புதுக்கவிதை) போன்ற இலக்கிய வகைகளின் தோற்றத்துக்கும் ஐரோப்பிய இலக்கிய அறிமுகத்தின் தொடர்பு இருந்தது என்பது வெளிப்படை. இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். வெளியிலிருந்து எதையும் முற்றாகவும் நிலையாகவும் திணித்துவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் அகச்சூழலுக்குப் பொருந்தி வரும்பொழுது மட்டுமே இதற்குச் சாய்கால் (செல்வாக்கு) வேர்கொள்ள முடியும். இல்லையெனில் சில முன்னோடிகளின் முயற்சி என்ற அளவிலே அது முடிந்து போய்விடும்."

—மேற்படி நூல்—பக் 10. கோ.கேசவன்—

தமிழகத்தின் அகச் சூழலுக்குப் பொருந்தி வரும் படைப்புகளை உருவாக்கியவர்களை யாரேனும் பட்டியலிட்டுத் தொகுத்தளித்தால் நல்லது!

ஆனால், இன்று தமிழகத்தில் படித்தவரிடையே சாய்கால் பெற்ற படைப்புகள் பாராட்டும்படியாகவோ, தமிழின ஏற்றத்திற்கு உதவும்படியாகவோ இருக்கின்றன எனச் சொல்ல முடியுமா?

ஒன்றிரண்டு நெறிவிலக்காக இருக்க முடியும். அவை, சாய்கால் வேர் கொண்டவையா? வணிக நோக்கிலேயே படைப்புகள் புற்றீசல்களாகப் படையெடுத்து வருகின்றன.

இந்த நிலையில் 'இரண்டொன்றும்' இருக்கிற இடம் தேடிப் பிடிக்கும் வகையிலேயே, இருக்கும்!

அறிவையும், அறியாமையையும் சமமாக எண்ணி, உண்மையை நாடுகின்ற அறிவாளரைக் காண்பது கடினம் தானே!

தமிழ் இலக்கியம் பற்றிய, பரந்த பார்வையுடன் கூடிய ஆழமான நோக்கு ஆய்வாளர்க்குரிய முகாமையான பண்பு என்பதைத் திறனாய்வாளர் உணர்ந்தார் இல்லை.

எஃதை எழுதினால் பாராட்டு, விற்பனை, அரசு ஆதரவு கிடைக்கு-மென்ற கண்ணோட்டத்திலேயே, கருத்துகளைத் திரட்டுவதும், படைப்புகளை உருவாக்குவதும் யாவரும் அறிந்த ஒன்றே!

ஒரு கலைப் படைப்பின் வடிவத் தீர்மானிப்பில் ஆறு தன்மை-கள் பங்காற்றுவதாகக் கோ. கேசவன் கூறுகிறார். அவை:

1. கலைப் படைப்பின் உள்ளீடு திறன்கள். அதாவது அதன் உள்ளடக்கம்.
2. வகுப்பு (வர்க்க) மனநிலை, அதாவது கலைஞனின் வகுப்பு மனநிலை; கலைஞன் காட்டும் படைப்புகளின் (பாத்திரங்களின்) மனநிலை.
3. அயன்மை (அந்நிய)க்கலை இலக்கியத் தாக்கம்.
4. பண்டைய மரபுகளின் சாய்காலும் அவற்றிலிருந்து விடுபடத் துடிக்கும் முயற்சியும்.
5. கலைஞனின் பயிற்சி—பழக்கம், அவனது ஆழ்ந்த மனக் கிளர்ச்சி.
6. நுகர்வோர் தளத்தின் தர வேறுபாடு.

வடிவங்களைத் தீர்மானிப்பதில் தமிழின விடுதலைக்கான—தேசியத் தன்னுறுதிக்கான, முன்னேற்றத்திற்கான வரலாற்றியக்கப் பதிப்பினை உள்ளடக்கத்தில் கொண்டு வருகின்ற செயல் வேகம், உ.த.மு.க.வின் வளர்ச்சியோடு உருவாதல் வேண்டும். அந்த அடிப் படையில், பிறவடிவம் குறித்த தீர்மானிப்புகள் உருவாகும் என்பது சொல்லாமல் விளங்குமெனலாம். தென்மொழி இதழில் (சுவடி:24-ஓலை: 9) அதன் ஆசிரியர் வழமையாக அட்டையில் வெளியிடும் பாக்களில் ஒன்றை நுணுகி நுணுகிக் காண முயல்கிறேன். பாவலரேறு, பெருஞ்சித்திரனார் பற்றி 'அறிந்தோ' ஒதுக்கி விடும் போக்கைப் பலகாலம் கண்டு வந்துள்ளேன். இன்றுள்ள மொழித் தேசிய உரிமை எழுச்சியில், அவரை ஒதுக்கிவிட மூடியாமல் முற் போக்கு மூளைகள்' சிந்திக்கத் தொடங்கியுள்ளன! பாடலைப் படிப்போம்:

புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்!

முழங்கி முழங்கி முரசு கிழிந்தது!
மூடரின் நெஞ்சோ முன்பே கிழிந்தது!
வழங்கு சொற்களைச் செவிகள் வாங்கில!
வழி வழி மரபுகள் வரட்சி கொண்டன!

பழங்குட் டைகளில் படிந்த பாசிகள்
பாழும் சாதி, மதங்களாய்ப் படர்ந்தன!
எழுங்கதிர் எழுந்த படியே இருக்குமோ?
எழுந்து புகைவுரை எரித்துப் பொசுக்குமோ?

O திரவிட முரசொலி தமிழாய் முழங்குக!
தேயாத உணர்விஞல் இனநலம் வழங்குக!
கருவிடக் குழந்தைக்கு நாட்டுணர் வூட்டுக!
கருதுதல், பேசுதல், எழுதுதல், செய்தலாம்
வருவுணர் வனைத்திலும் விடுதலை வித்துக!
வாய்த்திடின் புரட்சியைக் குருதியில் மலர்த்துக!
ஒரு நிலை வரும்; அதற் கொருநாள் ஒதுக்குக!
உரிமைக் கிளர்ச்சியை மக்களால் ஓச்சுக!

O கொட்டும் புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்!
கொள்கை முழங்கித் தமிழர(சு) அமைக்கட்டும்!
முட்டும் பகையினை மோதி முறித்து, இம்
மூத்தமிழ்ப் பேரினம் முழு உரி மை பெற்றே,
எட்டும் கொடுமுடி தமிழினம் எய்தட்டும்!
ஏற்றமும் மாற்றமும் புத்துயிர்ப் பாகட்டும்!
நெட்டும் குறுக்குமாய் உலகில் பரவிய
நேற்றைய தமிழினம் இனி ஒன்று சேர்கவே!

பாடலை வரலாற்றியங்கியல் பார்வையில் படித்தல் வேண்டும். வெறுமனே படித்தால், மரபுமீட்சி போலத் தோன்றும். அண்மைக் கால இயக்க எழுச்சி வீழ்ச்சிகளைக் கணக்கிற் கொண்டு, புத்தெழுச்சி பெறத் தமிழின மக்களை அழைறை கூவுகிறது இப்பாடல்!

'முரசு' பழமையானதே. ஆயினும் அதனிடம் அரசு விழாக்களி லும் முதன்மை கொண்டு வருகிறது.

குடியரசுத் தலைவர், பழைய மரபுப்படியே 'அழைத்து' வரப்படும். பதவியேற்பு நிகழ்ச்சிகளை நாம் அறிவோம்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட அடிமை நிலையினைப் 'பழைமை'யானதென்று நாம் ஏற்பதில்லை. அன்றுள்ள பழஞ் சொல்லைப் புதுமை முரசாக அடித்து இன எழுச்சி கூட்டுவது சரியானதே! சொல்லுக்கு முதுமை இல்லை. அது தொடர்ந்து மக்க-ளால் உயிர்ப்புப் பெற்று வருவதாகும். வழக்கில் இல்லாமல் போகும் மொழி, உழைப்பில் உருவாகாத மொழியாகும். தமிழ் இயற்கை, அது மக்களின் உயிர்ப்பு. எனவே, தமிழ்ச் சொல்லாட்சி வீறு பெற்றுயர்வு கொண்டு நிற்பதாகும்! பாவலரேறு கடின உழைப்பும், இனத்தின் மீது உண்மை ஈடுபாடும் கொண்டவர். எனவே, அவர் தம் சொல்லாட்சியில் உள்ள கிளர்ச்சி, வளர்ச்சியும் வாழ்வும் கொண்டிருக்கும்!

முழங்கி முழங்கி முரசு கிழிந்தது!

இலக்கியம், இசை எனப் பரந்து விளங்கிய தமிழகப் பழம் பெருமைகளை அடித்தடித்துப் பேசி வந்த, தி.க., தி.மு.க. தமிழியக்கங்களின் 'வேலை' முடிந்து விட்டது. இவற்றின் 'முரசு தான் கிழிந்தது'. மக்கள் வாழ்வில் மாற்றமும் இல்லை, ஏற்றமும் இல்லை!

வாழ்வியல் முறையில் மாற்றம் காணாத தலைமைகளின் வாய் நீளம் அறுபட்டு விட்டது. 'ஆட்சிக்கு வந்தால்' என்ற அன்ற கூவல் எலலாம் அம்மணப்பட்டுப் போனது. இவர்களின் 'ஆணவம்'' அறியாமையின் கொடுமுடியில். எனவே, விரைந்து அம்பலப் பட்டார்கள். இதனை, 'மூடரின் நெஞ்சோ முன்பே கிழிந்தது' என்ற அடியால் அறிகிறோம்.

'பயனில் சொல் பாராட்டிப் பாராட்டி' இன்று அ.இ.அ.தி.மு.க அரசு வரை தமிழினம் கண்டது, காற்றைக் குடிக்கும்' அவல வாழ்வே!

'நயவற்க, நன்றி பயவா வினை' என்ற வள்ளுவர் வாய்மொழியை நினைவு கூர்வது இங்கு நன்று!

பாவலரேறு, கூறுகிறபடி, ''வழங்கு சொற்களைச் செவிகள் வாங்கின! வழி வழி மரபுகள் வரட்சி கொண்டன—ஆம், மக்களின் செவிகள், 'பொய் முழக்கங்களை' ஏற்க மறுத்து விட்டன! வழி வழியாக வந்த மரபுகள், உண்மை புரியாமல் வரட்சியடைந்தன. பொய்களோ, புதுமைக் கோலம் கொண்டன, பறக்கப் பறக்கப் பாய்ச்சிய 'புதிய பொய்கள்', தமிழ் மண்ணில்வேர்க் கொள்ளாமல் போயின!

பழமையில் தங்கிப்போன 'குட்டைகளில்'—சாதி, மதம் என்னும் பாசிகள் படர்ந்தன. அவைதாம் உயிரோட்டம் அற்ற தமிழர்களின் 'உடமைகள்' எனப் பெற்றன. தமிழ் அறம், ''ஆற்றுக்குப் போனதுமில்லை, அழகரைக் கண்டதுமில்லை'' என்றவாறு, போற்றுவாரின்றிப் புறந்தள்ளப்பட்டது! அதன் விளைவால், தமிழினம் திசை மாறி, வழி மயங்கிப் போனது!

இந்நிலை மாறாதா?

அறம் அதன் வழியே செல்லும், அதன் கதிர் வெப்பத்தில் அன்பற்ற—இனப் பிடிப்பில்லாத, இலக்கிய வாழ்வு, சுட்டெரிக்கப் படும்.

கதிரவன் கீழ்வானில் தோன்றி, எழுந்து வெங்கதிர் பரப்பும். கீழ்வானில் எழுந்தபடியே, இருந்து விடும் கதிரவன் என்பார்களோ? உலகின் சுழற்சியில், 'பகைப் புலன்கள்'—படைப்புகள் எரிந்து போகும்; சாம்பலாகும்.'

அறத்தின் முன்னே 'பொய் சாகத்தான் சாகும்' என்கிற கொள்கை கொண்ட பாவலரேறு,

"எழுங்கதிர் எழுந்த படியே இருக்குமோ?
எழுந்து பகைவரை எரித்துப் பொசுக்குமோ?"

என்றஞ்சுகிறார், 'பகைவர்க்கு இரங்கும் நன்னெஞ்சம்' இவ்வாறு, யாது நிகழுமோ என்று 'புலம்பு'வது இயல்புதானே, 'இப்படி அழிம்பு பண்ணுகிறானே, நான் அஞ்சியபடியே நடந்து விட்டதே' என்று, கூறிப் புலம்பியழும் தாய்மனம், இப் பாவடிகளில் வெளிப்பட்டுள்ளது!

தமிழகத்தில் தி.மு.க.வின் வளர்ச்சி; அதன் தலைமையின் செருக்கு சிறப்புகளைக் கண்டு வந்த பாவலரேறு, அதன் 'வழி தப்பிய' நடப்புகளைக் கண்டு மனம் நொந்து போயிருக்கிறார். ஆயினும், அவ்வியக்கம், தன் உயிர்ப்புக்கு அடிப்படையாகவுள்ள தமிழ், இன, நாட்டுணர்வுக்குப் பயன்படல் வேண்டும் என்பதால்,

"திராவிட முரசொலி,
தமிழாய் முழங்குக!
தேயாத உணர்வினால்
இன நலம் வழங்குக"

என வேண்டுகிறார்!

'கருவில் திரு' என்பதில் பாவலரேறு நம்பிக்கை உடையவர், அதுசிலர்க்கே வாய்க்கும் என்பார். தமிழர் அனைவரும், தமிழ்,இனம், நாடு என்னும் மூவுரம் பெற்றவராக விளங்குதல் வேண்டும். அதற்கான, இயக்க முயற்சியை வலியுறுத்தி மேலும் கூறுவார்:

கருவிடக் குழந்தைக்கு
நாட்டுணர் வூட்டுக!
கருதுதல், பேசுதல்,
எழுதுதல் செய்தலாம்
வருவுணர் வனைத்திலும்
விடுதலை வித்துக"

'விடுதலை'க் கல்வியைத் தமிழினத்திற்கு ஊட்டும்படி கூறுகிறார் பாவலரேறு.

கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, செயலுரிமை பெற உணர்வனைத்திலும் 'விடுதலைவித்து' போட வேண்டும். அவ்வித்தினை வளர்ச்சி பெறச் செய்யவே இயக்கம் வேண்டும்.

கருவிலிருந்து... குருதியோட்டம் அனைத்திலும், விடுதலை வித்து வளர்ந்து, புரட்சி மலர வேண்டும். அதற்கான 'உரிமைக் கிளர்ச்சியை' மக்களைக் கொண்டு ஓங்கி வளரப் பண்ணுதல் வேண்டும் என்கிறார்

பாவலரேறு! இதற்கு இனநலப் பார்வை'யை அடிப்படையாக வைக்கிறார் அவர். இப் பார்வை—கொள்கை—தமிழரசு அமைக்கும் என்கிறார்.

அப்படி யெனில், இன்றுள்ள 'தமிழக அரசு',' தமிழ் அரசாக, இல்லாமல், அடிமை வாழ்வாக இருப்பதைக் கண்டு பாவலரேறு குமுறுகிறார் என்பது தெளிவு.

"முத்தமிழ்ப் பேரினம், முழுவுரிமை பெறுக,
கொடுமுடியில் தமிழினம் ஏறி உயர்க,
ஏற்றம் வரும்; மாற்றம் வரும், இவை
தமிழர்க்குப் புத்துயிர்ப்பு தரட்டும்.
உலகில் கிழக்கு மேற்காக, வடக்கு
தெற்காகப் பரவியுள்ள தமிழினம்
ஒன்று சேரட்டும்" எனத் தமிழினத்திற்கு உள்ள

கடமைகளை உணர்த்தியுள்ளார் பாவலரேறு. O

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். மதம் என்பதும் கட்சி என்பதும். அரசுப்பணி என்பதும் பார்ப்பனர்களுக்கு ஒரு போர்வைதான். அவர்களுள் ஓரிருவரைத் தவிர மற்ற அனைவருமே பார்ப்பன உணர்வோடுதான் எந்த இடத்திலும் இயங்குகின்றனர்.

முடிவுரை ; இந்திய அளவிலும் தமிழக அளவிலும் சிதைந்து வரும் பார்ப்பனியத்தை நீடிக்கச் செய்யும் முயற்சிகளிலேயே நரசிம்மரின் அரசும், செயலலிதா அரசும் உள்முகமாகச் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டுதான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மண்டல்குழு செயல்படுத்தத்தை சாக்குப் போக்குச் சொல்லி நீட்டிப்பதும், பாபர் பள்ளிவாசலை இடித்து இசுலாமியருக்கு எதிரான இந்துமத வெறியைத் தூண்டுதலும், அரசியல் நிலையில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குதலுமாகும், தமிழகத்தில் கோயில்களைப் 'புதுப்பிப்பது சங்கராச்சாரி பெயரில் பார்ப்பனிய நூல்களைக் கற்பிக்கக் கழகம்நிறுவுதலும், பார்ப்பனச் செயலலிதாவின் ஊழல்களை மறைப்பது அறிக்கை நாடகங்களுமாகும். இக்கொடுமைகளிலிருந்து தமிழக மக்கள் விடுதலைப் பெறுவதற்கு பார்ப்பனியத்திற்கு எதிரான முரண்பாடுகளை ஒவ்வொரு நிலையிலும் நாம் கூர்மைப்படுத்த வேண்டும். இறுதியில் பொதுஎதிரிக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராடவும் வேண்டும். O

உவக்கிறதோ? அடிமை வாழ்வு?

— பாவலர் இளஞ்சித்திரன் —

1. அறம்சொல்ல ஆயிரம்பேர் பாவலர்கள்!
அணிஅணியாய் அழகழாய் இருக்கின் றார்கள்
புறம்கண்டு, அகம்கண்டு, பொதுமை கண்ட
பூவுலகில் முதல்தாயாம் தமிழ அன்னை
மறம்சொல்லி, அவள் கைகள் விலங்கு டைக்கும்
வகைஎழுதும் பாவலர்கள் தாமிங் கில்லை!
நிறம்கெட்ட அடிமைநிலை வாழ்வி வர்க்கே
நிறைவாழ்வாய் இருக்கிறதோ! வீரம் எங்கே?

2. ஒழுங்கெடுத்துப் பேசுதற்கிங் கிருக்கின் றார்கள்
ஓராயி ரக்கணக்கில் பாவ லர்கள்;
விழுந்துவிட்ட தமிழினத்தைத் தூக்கி வைக்க,
விடுதலைக்குக் குரல்கொடுக்க, மறந்து விட்ட—
மழுங்கிவிட்ட தன்மான உணர்வை யூட்ட,
மறவுணர்வுப் பாவலர்கள் தாமிங் கில்லை!
அழுந்திவிட்ட அடிமைநிலை வாழ்வி வர்க்கே
அழகாகத் தெரிகிறதோ! வீரம் எங்கே?

8. அழகெடுத்துப் பாடுதற்குப் பாவ லர்கள்
ஆயிரமாய் இருக்கின்றார்! அடடா! இங்கே
வழங்குமொழி தமிழ்நிலத்தை மீட்டெ டுக்க
வல்லதமிழ்க் கொடியுயர, பகைகள் வீழப்
பழம்பெருமை, புகழ்பேசி எழுச்சி யூட்ட
படைமறவப் பாவலர்கள் தாமிங் கில்லை!
அழகிருக்கும் அடிமைநிலை வாழ்வி வர்க்கே
அறுசுவையாய் இனிக்கிறதோ! வீரம் எங்கே?

4. பெண்ணெழிலை, பாலுணர்வைப் பெரிதாய்ப் பாட,
பேரரங்குப் பாவலர்கள் ஆயி ரம்பேர்!
மண்ணடிமை தீரஒரு மானம் சொல்ல,
மக்களினப் போர்ப்படையைத் திரட்டு விக்க,
கண்ணினும்நல் உரிமைகட்குப் புரட்சி செய்யும்
களஉணர்வுப் பாவலர்கள் தாமிங் கில்லை!
புண்ணடிமை நிலையிருக்கும் வாழ்வி வர்க்கே
புகழ்வாழ்வாய் மணக்கிறதோ! வீரம் எங்கே?

5. கடவுளினைப் பாடுதற்கும் எழுது தற்கும்
கணக்கின்றிப் பாவலர்கள்! குறைவே இல்லை!
இடம்கெட்ட இனமாகத் தமிழ் மக்கள்
இருக்கின்ற நிலைஎண்ணின் தூக்கம் இல்லை!
தடம்சொல்லி அவர்க்குற்ற வீரம் சொல்லும்
தறுகண்பா வலர்கள்தாம் இங்கே இல்லை!
உடன்பட்டுப் போனதுவோ அடிமை வாழ்வு?
உவக்கிறதோ? இம்மண்ணின் வீரம் எங்கே?

பாவலரேறு ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லி கையெழுத்தியக்கமும் பிற அமைப்புகளின் வலியுறுத்தலும்.

1. உலகநாத நாராயணசாமி அரசு க கல்லூரி மாணவர்களின் கையெழுத்தியக்கம்:

உலகநாத நாராயணசாமி அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் நம் பாவலரேறு ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லிக் கையெழுத்தியக்கம் நடத்தி, ஏறத்தாழ நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கையொப்பம் போட்டுள்ளனர்.

கடந்த 25-7-93—அன்று வாக்கில் கல்லூரி மாணவர்கள் சிலரும், புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர்கள் சிலரும சேர்ந்து மாணவர்களிடையே கையெழுத்தியக்கம் நடத்தினர்.

தமிழக அரசே!
தமிழுக்காகவும், தமிழினத்துக்காகவும் வாழ்ந்து கொண்டு இருக்கும் தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரைத் 'தடா'ச் சட்டத்திலே தளைப்படுத்தி வைத்திருப்பதைத் தமிழ்மொழி மற்றும் தமிழினப் பற்றாளராகிய நாங்கள் கண்டிக்கிறோம். இது தமிழினத்தின் கருத்துரிமையைப் பறிக்கின்ற நடவடிக்கையாகும். எனவே தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை எவ்வகைக் கட்டாயமுமின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென இதன் கீழ்க் கையொப்பமிட்டுள்ள நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

—என்கிறபடியாக மடல் எழுதி அம் மடலின் கீழே மாணவர்கள் கையொப்பமிட்டனர்.

கடந்த 1-8-93—அன்று கையொப்பம் இடப்பட்ட முகவரித் தொகுப்புகளைத் தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்தனர் மாணவர்கள்.

உலகநாத நாராயணசாமி அரசு கலைக்கல்லூரித் தோழர்களுக்கும், துணை நின்று செயலாற்றிய தோழர்களுக்கும் தென்மொழி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழகத்தின் கல்லூரிகளிலெல்லாம் இத்தகைய முயற்சிகளில் தென்மொழி அன்பர்கள் ஈடுபடல் நல்லது.

2. மக்கள் கல்வி இயக்கத்தின் மாநிலச் செயற்குழுவின் தீர்மானம்:

கடந்த 4-7-93—அன்று திண்டிவனத்தில் கூடிய மக்கள் கல்வி இயக்க மாநிலச் செயற்குழுவில் பாவலரேறு ஐயாவை விடுதலை செய்யக்கோரி தீர்மானம் போடப் பெற்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :

தமிழ் அறிஞரும் தமிழ்ப் பாவல(கவிஞ)ருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தடா'வில் தளை(கைது)செய்து கடந்த 6 மாத காலமாகச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அவரை விடுவிக்க வேண்டி மக்கள் குடியுரிமைக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, அடக்குமுறைச் சட்ட எதிர்ப்புக்கூட்டமைப்பு இயக்கம் போன்றவை பல கூட்டங்கள் நடத்தி உள்ளன. பல இடங்களில் இதுபோன்ற கூட்டங்கள் நடத்தத் தடை செய்யப்பட்டுள்ளன. தமிழக அரசு தொடர்ந்து மேலும் மேலும் ஒரு காவல்துறை அரசாக மாறி வருவதை இது காட்டுகிறது. இந் நிலையில் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்யக் கோரி நடத்திய கூட்டங்களை தடைத் செய்ததையும் இன்னும் அவரைச் சிறை வைத்திருப்பதையும் குறித்துத் தமிழக அரசை இம் மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

3. பாவலரேறு ஐயா அவர்களை விடுதலை செய்யக் கோரிப் போராட வலியுறுத்தி அரசியல் கட்சிக்கு பேராசிரியர் சாலையார் மடல்:

கடந்த 31-7'93—அன்று பாவலரேறு ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லிப் பெரிய அளவில் போராட்டம் செய்திடல் வேண்டும் என்றும்; நம் சிந்தனைகளில் உள்ள பாவலரேறு அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கையில் நாம் வ ளாயிருப்பது சரியன்று என்றும் பேராசிரியர் சாலை இளந்திரையனார் அவர்கள் பா.ம.க. தலைவருக்கு மடல் எழுதியுள்ளார். அதன் படியை அனைத்து அமைப்புகளுக்கும் அனுப்பியுள்ளார். ○

பிழை திருத்தம்

அன்புடையீர்! வணக்கம்.

பொழிலன் தலைமையில்

புறப்பட்டதுகார்ண் புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற வரிகள் புரட்சிகர இளைஞர் முன்னணிக்குப் பொழிலன் தலைவர் என்று கூறுவதாக அமைந்துள்ளதாகவும் அதைத் தெளிவுபடுத்தி அடுத்துவரும் தென்மொழியில் ஒரு விளக்கச் சிறு குறிப்பு வெளியிடச் சொல்லுங்கள் என்று புரட்சிகர இளைஞர் முன்னணியினர் கேட்டுக்கொண்டார்கள்.

ஆகவே தாங்கள் இது குறித்து ஒரு சிறு குறிப்பை அடுத்த தென்மொழியில் எழுதவேண்டுகிறோம். - அன்பன், தமிழ்க்குமரன்.

குறிப்பு: பாவலர் தமிழ்க்குமரன் அவர்கள் பு.இ.முன்னணியுடன் பொழிலன் அவர்களின் பெயர் கூட்டி தவறுதலாக எழுதிய பாடல் கவனிக்காமலே அச்சிடப் பெற்றதற்கு மிகவும் வருந்துகிறோம்; அன்பர்கள் பொறுத்து கொள்க!

நம் பாவலரேறு ஐயா அவர்கள் 3-9-93-அன்று வழக்குமன்றம் வருகிறார்கள்.

கடந்த 27-1-93—அன்று, தடா' கொடுஞ் சட்டத்தின் கீழ்த் தளைப்படுத்தப்பட்டார் நம் ஐயா அவர்கள்.

பாவலரேறு அவர்களுக்கு முதன்முறை போடப்பட்ட பிணை" யலைச் சிறப்பு நடுவர் மன்ற நடுவர் சித்திக் கடந்த 12-2-93" அன்று மறுத்துவிட்டார்.

17-3-93—அன்று பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்பு வழக்கு மன்றம் வந்தார்கள். அவரின் சிறைக்காவல் நீடிப்புச் செய்யப் பெற்றது.

2-4-93—அன்று பாவலரேறு அவர்களுக்கு இரண்டாம் முறையாகப் போடப்பட்ட பிணையலைச் சிறப்பு நடுவர் மன்ற நடுவர் சௌந்திரபாண்டியன் மீண்டும் மறுத்துவிட்டார்.

12-5-93—அன்று பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்பு வழக்கு மன்றம் வந்தார்கள். அவரின் சிறைக் காவல் மீண்டும் நீடிப்புச் செய்யப்பெற்றது.

7-7-93—அன்று பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்பு வழக்கு மன்றம் வந்தார்கள். நடுவர் இராதாகிருட்டிணன் மீண்டும் ஐயா அவர்களுக்குச் சிறைக் காவல் நீட்டிப்புச் செய்தார்.

தொடர்ந்து...
நம் ஐயா பாவலரேறு அவர்கள் **3-9-93**-அன்று வழக்குமன்றம் அழைத்துவரப்பட உள்ளார்கள்.

சென்னை-உயர் வழக்கு மன்ற (High court) வளாகத்திற்குள் உள்ள இரண்டாம் சிறப்பு வழக்குமன்றத்திற்கு ஐயா அவர்கள் காலை 10-30மணிக்கு அழைத்து வரப்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— அமைச்சர்.